www.tamilarangam.net

P. RAYA

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE . FRANCE

# மனிதம்

10

பங்-சித் 91




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரண பயம்

****************** * ****************

• யதார்த்தினி •

அன்பு நண்பா
சூரியனை இழுத்துப் பிடிக்கும்
சூத்திரர்கள்
சுதந்திரமாய் வாழும் நாடு இது
நாம் இங்கே
நெருப்பை சுவாசிக்கின்றோம்

ம்.... என்கிறாயா ?
வேண்டாம்
வேண்டவே வேண்டாம்
அது எமது மொழி
மௌனம் ஒரு மொழி
அறிந்திருப்பாய் நீ
நாம்
பேசிக் கொண்டிருக்கிறோம்

தொடரும் காலங்களில்
உனக்கு
வெற்றுத் தாள்கள் மட்டுமே வரலாம்
ஏனென்றால்
எழுத வாசிக்க
முடியாத சமுதாயம்
முளைவிட்டுக் கொண்டிருக்கிறது

உன்னிடம் ஒரு வேண்டுகோள்
மௌனித்து விடாதே !
மௌனிக்க விடாதே !
மௌனம்
அது மொழி அல்ல
மரண பயம்.

www.tamilarangam.net

# மனிதம்



புதிய முறையில்
கொலைகள் நடக்கலாம்
புரியாத நிலையில்
மக்கள் திகைக்கலாம்
எதுதான் ஆகினும்
அப்பப்போ
பேச்சுக்கள் தொடரலாம்.

- யதார்த்தினி -

- பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் படுகொலை!
- அரசு - புலி பேச்சுவார்த்தை!

ரஞ்சன் கொலைக்கு காரணமாக பல அமைப்புகளை அரசு சந்தேகித்தாலும் புலிகளே இதை செய்துள்ளார்கள் என அறிவித்துள்ளது. இப் படுகொலையை தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வுகளும், அமைச்சர்களுக்கே(!) தெரியாத புதிய அமைச்சு மாற்றங்களும் இவர்களிடையே முரண்பாடு இருப்பதை காட்டுகிறது. அதன் பின்னணியில் இக் கொலைச் சம்பவத்தை மக்கள் சந்தேகிக்கையில் அரசு புலிகள்மேல் பழியைப் போடுவதிலேயே அக்கறை கொண்டுள்ளது. வட-கிழக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கும், அதற்கான ஆதரவை சிங்கள மக்கள் மத்தியிலிருந்து மேலும் பெற்றுக்கொள்வதற்கும் ரஞ்சன் விஜயரட்ண போன்றவர்களின் படுகொலையை தனக்கு சாதகமாக பயன்படுத்துகிறது அரசு.

மறுபுறம் பத்திரிகைச் செய்திகள் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சூழ்நிலைகள் தென்படுவதாகவும் திரைமறைவில் அதற்கான முயற்சிகள் நடப்பதாகவும் கூறுகின்றன. ஆனாலும் இன வாதத்தையே உயிர்நாடியாகக் கொண்டிருக்கும் இலங்கை அரசு பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதாக உலகுக்கு குறிப் பாக இந்தியாவுக்கு காட்டுவதற்காக, தான் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டி ருப்பதாக நாடகமாடுகிறது. ஆனால் இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டிய 'பொறுப்புள்ள' அரசு, தான் எந்த திட்டங்களையும் முன்வைக்காமல் தமிழ்க் குழுக்களி-டமே திட்டத்தை தாருங்கள் என கோரி நிற்கின்றது. இதிலிருந்தே அரசு இனப் பிரச்சினையை தீர்ப்பதில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பது தெளி வாகிறது.

வட-கிழக்கில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளும், தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப் பட்டுப் போன துரோகக் கும்பல்களையே புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்துவதும், திருகோணமலை போன்ற கிழக்குப் பகுதிகளில் குடியேற்றத் திட்டங்களை இன்றைய நிலைமைகளில் கூட மேற்கொள்வதும் இன அழிப்பே இந்த அரசின் நோக்கம் என்பதை அப்பட்டமாக்குகிறது.

. . . . .

சர்வதேச அரங்கில், அவுஸ்திரேலியா தமிழ் மக்-களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்திருக்கிறது. இது சர்வதேச ரீதியில் தமிழ் மக்களுக்கு அரசியல்ரீதியாக சாதகமான அம்சமே! . மேற்கு ஐரோப்பிய நாடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை கண்டித்திருப்பதோடு, இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காணுமாறு நிர்ப்பந்திக்கின்றன. [இந் நாடுகளின் நோக்கங்கள் வெவ்வேறாக இருக்கலாம்.] அண்மையில் மடுவில் உள்ள அகதி முகாமிலிருந்து அகதிகளை வெளியேற்றும் முயற்சியிலிருந்து அரசு பின்வாங்கிக் கொண்டது. ஐ.நா சபையின் அகதிகள் பராமரிப்பு பிரிவின் கீழ் அரசு சாராற்ற வெளிநாட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இவ் அகதிமுகாமின் இடமாற்றம் கைவிடப்பட்டமையை இத்தகைய நிர்ப்பந்தத்துக்கு உதாரணமாக கொள்ளலாம்.

அதேநேரம் இன்று இந்திய அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் இலங்கையை பேச்சுவார்த்தைக்கு வரும்படியான நிர்ப்பந்தத்தை கொடுத்திருக்கிறது. இதேவகையான நிர்ப்பந்தத்தையே விடுதலைப் புலிகளுக்கும் கொடுத்திருக்கின்றது.

இந்திய வெளியுறவுச் செயலர் சுக்லாவின் இலங்கை விஜயமும், "இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்வைக் காணுங்கள்" என்ற அவரது வேண்டுகோளும், தமிழ் நாட்டில் புலிகளுக்கு எதிரான கெடுபிடிகளும் இதனையே தெளிவுபடுத்துகின்றன. புலிகள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட மறுக்கும் பட்சத்தில் புலிகளை நிர்ப்பந்திக்கும் பொருட்டு இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை ஊக்குவிக்கலாம் அல்லது கண்டும் காணாமல் இருக்கலாம். ஆக, மீண்டும் ஒர் பேச்சுவார்த்தைக்கான சூழல் நிலவுவதை உணரமுடிகிறது.

www.tamilarangam.net



# இந்த செய்தி நிறுவனங்கள்.




இந்த வருடத்தில் மிகப் பெரும் அழிவுகளை கொடுத்த ஒரு யுத்தம் நிகழ்ந்திருக்கிறது. இது வரையில் எந்த ஒரு யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கிக் கொள்ளாத சுவிஸ் போன்ற நாடுகளின் மக்கள் எப்போதுமே தொலைத் தொடர்பு சாதனங்களினூடாகத்தான் அறிந்து கொள்கிறார்கள்; யுத்தம் என்றால் எப்படி இருக்கும் என்று.

C.N.N, ABC, NBC, CBS போன்ற அமெரிக்க செய்தி நிறுவனங்களும், ஏஜென்ட் பிரான்ஸ் பிரஸ் [பிரான்ஸ்], Reuter [ராய்ட்டர்] [பிரித்தானியா], உட்பட மேற்கு ஐரோப்பிய செய்தியாளர்களும் வளைகுடா யுத்த நிகழ்வுகளை வெளிக் கொண்டு வருவதில் முன்னணியில் நின்றனர்.

C.N.N [Cable News Network] என்ற தொலைக் காட்சி நிறுவனம் வளைகுடா யுத்தத்தை படம் பிடித்துக் காட்டுவதில் தலைமைப் பாத்திரம் வகித்தது. 500 க்கும் அதிகமான நகரங்களில் 100 க்கும் அதிகமான செய்தியாளர்களை நிறுத்தி வைத்தது. இவர்கள் கொடுக்கும் செய்திகளை 150 க்கும் அதிகமான தொழில் நுட்ப வல்லுனர்களின் உதவியுடன் அத்லாந்தில் உள்ள தனது தலைமை அலுவலகத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரையாக செய்திகளை வெளியிட்டது இந்த C.N.N தொலைக் காட்சி நிறுவனம்.

வளைகுடாவில்: C.N.N இன் செய்தி, C.N.N தலைப்பு செய்தி, C.N.N செய்திக் கோவை என்று 30 நிமிடங்களுக்கு ஒரு முறையாக நாள் முழுவதும் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தது. அமெரிக்க மக்களுக்கு சாப்பாட்டைப் போல யுத்த செய்திகளை "சுவை" யாக கொடுப்பதில் C.N.N செய்தி நிறுவனம் முன்னணியில் நின்றது.

ஈராக்கினதும், குவைத்தினதும் வான் பரப்பில் பறக்கும் ஆயிரக் கணக்கான குண்டு வீச்சு விமானங்கள்.... அதன் முனைகளில் எலெக்ரோனிக் கருவிகள் தாக்குதல் நடத்த வேண்டிய இடத்தை சரியாக கண்டுபிடித்து அந்த இடத்தில் குண்டை போடும் விமானிகள், அதை நேரடியாகவே சுவதியில் தொலைக்காட்சியில் பார்த்து பத்திரிகையாளர்களுக்கு விளக்கும் அமெரிக்க, பிரித்தானிய இராணுவ பேச்சாளர்கள்....

இஸ் அவிவிலும், ரியாட்டிலும் வந்து விழும் ஈராக் ஸ்கட் ஏவுகணைகள்..... இவ்விரு தலை நகரங்களில் பாதிக்கப்பட்ட ஒரு சில மக்கள் அமெரிக்க ஜனாதிபதி புஷ் இனதும் மற்றும் மேற்குலக தலைவர்களினதும் ஈராக்கிற்கு சவால் விடும் பேச்சுகள்..., ஆங்காங்கே நிகழும் ஒரு சில யுத்த எதிர்ப்பு உணர்வலைகள், இப்படியான செய்திகளை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டி C.N.N நிறுவனம் மட்டுமே பல கோடி டொலர்களை சம்பாதித்துக் கொண்டது.

வளைகுடா யுத்தத்தோடு உலகில் மிகப் பெரிய செய்தி நிறுவனங்களில் ஒன்றாக தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது C.N.N தொலைக் காட்சி நிறுவனம்.

C.N.N தனது TALK SHOW என்ற நிகழ்ச்சியில் அதனை வழங்குபவருக்கு ஐந்து வருடகால ஒப்பந்தம் போட்டு ஒன்பது மில்லியன் டொலர்களை கொடுக்கும் அளவுக்கு வளைகுடா யுத்தத்தில் சம்

www.tamilarangam.net



பாதித்துக் கொண்டுள்ளது.

C.N.N. மட்டுமல்ல ஏனைய மேற்குலக செய்தி நிறுவனங்கள் கூட இது ஒரு யுத்தம். இந்தக் கணத்தில் ஈராக்கிலும் குவைத்திலும் ஆயிரக் கணக்கான அப்பாவி அராபிய மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். பல இலட்சக் கணக்கானோர் படுகாயப் படுகின்றனர்; என்ற உண்மையை ஒரு அனுதாப உணர்வை ஏற்படுத்தவில்லை. மாறாக அமெரிக்காவின் ஒரு இராணுவ திரைப்படத்தைப் பார்ப்பது போன்று இன்னும் விளங்க கூறின் ரம்போ படத்தை போல படம் பிடித்துக் காட்டுவதே இந்த மேற்குலக செய்தி நிறுவனங்களின் செயற்பாடாக இருந்தது.

செய்தி நிறுவனங்கள் செய்திகளை முழுமையாக வெளியிட செய்தித் தணிக்கை ஒரு சிறு காரணமே தவிர அதுவே முழுமையாகிவிடாது. ஏனெனில் கடந்த காலங்களில் இந்த மேற்குலக செய்தி நிறுவனங்கள் இழைத்து வந்த மாபெரும் தவறுகள் நிறையவே இருக்கின்றன. இதை உறுதிப்படுத்துகிறது; News And Fututers என்ற ஆய்வு. இன்று நேற்று அல்ல பல பத்து வருடங்களாகவே உலகில் மிகப் பெரிய நான்கு செய்தி நிறுவனங்கள் இருந்து வருகின்றன. அவை

யுனைட்டட் பிரஸ் இன்ரநாசனல் UPI
அசோசியேட்டட் பிரஸ் AP
ராய்ட்டர் Reuter
ஏஜென்ஸ் பிரான்ஸ் பிரஸ் AFP

இந்த நான்கு செய்தி நிறுவனங்கள்தான் உலகம் முழுவதும் வெளிவரும் பத்திரிகைகளுக்கு தொண்ணூறு சதவீத வெளிநாட்டு செய்திகளை வழங்குகின்றன. இதில் AP, UPI அமெரிக்காவுக்கும், ராய்ட்டர் இங்கிலாந்திற்கும், AFP பிரான்ஸுக்கும் சொந்தமானவை. இவர்கள் கொடுக்கும் செய்திகள் மலிவானதாகவும், நம்பகரமான

www.tamilarangam.net



தாகவும் இருக்கும் என்று பெயர் பெற்றுள்ளன. ஆயினும் உண்மை நிலைமை அப்படி இல்லை. இச் செய்தி நிறுவனங்கள் எப்போதுமே தமது நாடுகளின் நலன்களுக்கு விரோதமான செய்திகளை கொடுப்பதற்கு முன்வரமாட்டா. இதற்கு உதாரணமாக ஒரு செய்தியை குறிப்பிடலாம்.

பிரேசில், பனாமா, பெரு, ஈகுவடோர் ஆகிய நான்கு நாடுகளை அயலாக கொண்டுள்ள ஒரு சிறிய நாடு "சூரி நாம்". இது 1975 Nov 25 ல் சுதந்திரக் குடியரசாகியது. இந்த செய்தியை அதன் அயல் நாட்டு பத்திரிகைகள் எதுவுமே பிரசுரிக்க முன்வரவில்லை. காரணம் இவர்கள் வெளி உலக செய்தியை அமெரிக்காவிலுள்ள UPI நிறுவனத்திடமிருந்தே எதிர்பார்ப்பவர்கள். சூரிநாமின் விடுதலையை மூடி மறைக்கும் விதத்தில் நியூயோர்க்கில் நடந்த ஒரு நகைக் கொள்ளைச் சம்பவத்தையே முதன்மைச் செய்தியாக வழங்கியது UPI. பிரேசில் பத்திரிகைகளும் இதையே பிரசுரித்து; உள்பக்கத்தில் ஒரு சிறிய பெட்டியில் சூரிநாம் குடியரசு அடைந்த செய்தியை வெளியிட்டன. இத்தகைய பண்பை கொண்ட செய்தி நிறுவனங்கள் வளைகுடா யுத்தத்தில் மட்டும் உண்மை செய்திகளை வெளியிடவா போகிறது!

வளைகுடா யுத்தத்துக்கு ஆதரவான ஒரு கருத்துப் பரப்புரையைப்பற்றும் நோக்கிலேயே இந்த செய்தி நிறுவனங்கள் தமது செய்திகளை தகவமைத்து கொடுத்தன.

சதாமை ஒரு சர்வாதிகாரியாக சித்தரிக்க; ஹிட்லரின் வாரிசு, ஸ்டாலினின் பேரன் என்று அடை மொழிகள் கொடுத்து அழைத்தன. இன்றைய உலகில் ஏதோ சதாம் ஹுசைன் தான் ஒரு சர்வாதிகாரி போலவும்; அவனை ஒழித்துக் கட்டுவதன் மூலம் அரபுப் பிராந்தியங்களில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே அமைதிசமாதா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணத்தை நிலை நிறுத்த முடியும் என்றும் ...., தமது மக்களை மூளைச் சலவை செய்யும் வகையில் செய்திகளை அவிழ்த்து விட்டன.

சதாம் ஒரு சர்வாதிகாரி, சதாம் ஒரு கொலைகாரன், சதாம் ஒரு பெண் பித்தன் என்று செய்திகளை அடுக்கின. அமெரிக்காவிலோ சதாமின் படத்தை கக்கூஸ் பேப்பரில் அச்சடிக்கும் அளவுக்கு நாகரீகம் மேலோங்கியது.

யுத்தம் தொடங்கியதன் பின்பு ....
சதாம் தனது குடும்பத்தவரை சுவிஸ்க்கு அனுப்பி வைத்து விட்டான் என்றும் ..., குவைத்தில் இருந்து ஈராக்கிய படைகள் வெளியேறும் என்ற அறிவிப்புக்கு பின்னர் சதாம் அல்ஜீரியாவுக்கு தப்பி ஓடி விட்டான் என்றும் ... பல பொய்யான தகவல்களையும் இந்த செய்தி நிறுவனங்கள் வெளியிட பின் நிற்கவில்லை. இவை ஒரு புறம்: அமெரிக்காவுக்கும் மேற்குலகுக்கும் சாதகமான செய்திகளை வெளியிடுவது, யுத்தத்தில் அமெரிக்காவுக்கு ஆதரவையும், வெல்லும் என்ற நம்பிக்கையை தோற்றும் விதத்தில் செய்திகளை வெளி யிடுவதும், மறுபுறம்: ஒரு மூன்றாம் உலக நாடு அமெரிக்காவுக்கு சவாலாகவோ? அதில் அமெரிக்கா வெற்றியடையாவிடின் ஏனைய மூன்றாம் உலக நாடுகள் அமெரிக்காவுக்கு எதிராக கிளர்ந்தெழும் என்ற நோக்கில் ஈராக் இராணுவத்தை பலவீனப்படுத்துவதிலும்--- சதாமை மிகவும் இழிவுபடுத்துவதிலுமே இந்த செய்தி நிறுவனங்கள் தீவிரமாக செயற்பட்டன.

மேற்கு ஐரோப்பிய செய்தி நிறுவனங்கள் அமெரிக்க செய்தி நிறுவனங்கள் அளவுக்கு கீழ்த் தரமான பிரச்சாரத்தில் இறங்கா விடினும் அமெரிக்காவின் செய்திகளை வாங்கி வெளியிடுவதில் மகிழ்ச்சியடைந்தன அல்லது திருப்திப்பட்டன.

மொத்தத்தில் மேற்குலக செய்தி நிறுவனங்கள் எல்லாமே

32 ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவாதம்:

## ** ஜனநாயக மறுப்பும் அய்க்கியமுன்னணியும் **

"புலிகளை ஆதரிக்க வேண்டும்!"

இது தமிழ்நாட்டில் MGR, நெடுமாறன், கருணாநிதி போன்ற இனவாத தலைவர்களால் புலிகள் உருப்பெற்ற காலத்திலிருந்தே எழுப்பப்பட்ட கோசம்!

இன்று சில மா-லெ குழுக்களும் (மார்க்சிய-லெனினிய குழுக்களும்) இதே கோசத்தை அரவணைக்கத் தலைப்பட்டுள்ளனர்.

"ஈழத் தமிழ்த் தேசிய இன விடுதலை யுத்தத்தில் விடுதலைப் புலி அமைப்பு தனித்து நின்று விடாப்பிடியாகப் போராடுகின்றனர். ஆகவே அவர்களை ஆதரிப்பது; ஆதரவாக நிதி சேர்ப்பது; இச் சந்தர்ப்பத்தில் அவர்களைப் பலவீனப்படுத்தும் வகையிலான பிரச்சாரங்களை (அம்பலப்படுத்தல் அல்லது குறைபாடுகளை வெளிக்கொணரல் போன்றவற்றை) தவிர்ப்பது; புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைக்க முயற்சிப்பது - இதுவே ஈழத்தமிழ் மக்களினதும், சிறு குழுக்களாக அல்லது உதிரிகளாக இருக்கும் ஜனநாயக சக்திகளினதும் இன்றைய தேசிய கடமை ஆகும்."

இவை "சமரன்" (தமிழ்நாடு மா-லெ குழுக்களில் ஒன்று) மற்றும் அதன் இளைஞர் அமைப்பான "மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம்" ஆகியன வெளியிட்டுள்ள பிரசுரங்களின் சாராம்சமாகும்.

மேலும் விடுதலைப் புலிகளின் ஜனநாயக மறுப்பு எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்துப் போரிடாமல் ஈழத் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் வெற்றி கொள்ள முடியாது என்றும்; புலிகளின் குறுங்குழு வாதம்

www.tamilarangam.net



தேசிய விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதற்குத் தடையாகவும் எதிரியுடன் சமரசம் செய்துகொண்டு பணிந்து போவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தக்கூடியது என்றும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையும் இப் பிர-சுரங்களில் சேர்த்துள்ள போதும் -

சாராம்சத்தில் (மேற்குறிப்பிட்ட வகையில்) தேசிய இன விடுதலை யுத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதையே இப் பிரசுரங்கள் கோருகின்றன.

NLFT எனப்படும் தமிழீழ தேசிய விடுதலை முன்னணியும் இதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளார்கள்.

“ புலிகளுக்கு எதிரான விமர்சனத்தை பகிரங்கமாக முன்வைப்பதை தவிர்த்து வந்திருக்கிறோம் ; இன்று தமிழ் மக்களுக்கு சிறிதளவேனும் பாதுகாப்பு இருக்குமாயின் அது புலிகளின் கையில் இருக்கும் ஆயுதம்தான்! . எனவே புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்த்து இலங்கை (அல்லது இந்திய) அரசுக்கெதிரான போராட்டத்தில் புலிகளுக்கு முழு ஆதரவை வழங்க வேண்டும்! ”

- இவை “மக்கள் பாதுகாப்புப் பேரவை” வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் காணப்பட்ட வாக்கியங்கள் ஆகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சமரன் குழுவினரின் பிரசுரங்களுக்கெதிராக கட்டுரை வழியிலும், கேள்வி-பதில் பகுதியிலும் பல வாதப் பிரதிவாதங்களை “புதிய ஜனநாயகம்” பத்திரிகை எழுதிவருகிறது.

www.tamilarangam.net



குறிப்பாக ஈழவிடுதலைப் போரில் துரோகத்துக்கு விலைபோகாது உறுதியுடன் நின்ற அமைப்புகளைத் தடை செய்தமை, இந்திய உளவுத்துறை 'றோ' (R.A.W) வின் போதனைக்கிணங்க சக போராளிகளைக் கொன்றமை, சிங்கள மக்களைக் கொலை செய்தமை போன்ற செயற்பாடுகளினூடாக புலிகளை ஒரு பாசிச சக்தியாகக் காண்பித்து புலிகளுடன் ஜனநாயகத்துக்காக போராடுவது தற்கொலைக்கு ஒப்பானது போன்ற கருத்துக்களை முன்வைக்கிறது "புதிய ஜனநாயகம்" பத்திரிகை.

மேலும் இஸ்ரேலிய 'மொசாட்' படையிடம் பயி-ற்சி பெற்றமை, போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டமை என்பவற்றை அம்பலப்படுத்தி, இந்திய உளவுப்படை 'றோ' வுடன் பேரம் பேசியதைச் சுட்டிக்காட்டி ... தேசிய இன விடுதலை யுத்தத்தில் புலிகள் ஊன்றி நிற்பதாகக் கூறுவதை மறுதலிக்கிறது "புதிய ஜனநாயகம்" பத்திரிகை.

இங்கு எமது பிரச்சினை என்ன ?

சிறிய அமைப்புகளானாலும் தார்மீக பலம் பெற்றிருப்பவை NLFT, "மக்கள் பாதுகாப்பு பேரவை" போன்றவை. (PLFT இன் நிலைப்பாடு தெரியவில்லை) "தேசிய இன விடுதலைப் போரை முன்னின்று விடாப்பிடியாக நடத்துகிறார்கள் புலிகள்" என்ற ரீதியில் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதே இன்றைய கடமையாகக் கருதுகின்றன.

சிறியவை ஆயினும் அமைப்பு வழியில் இருக்கும் ஜனநாயக சக்திகளாகிய இவர்களின் கருத்துக்கள்

www.tamilarangam.net



கட்டிக் கழித்துவிட முடியாதவை. இவர்களின் கருத்துக்களூடாக விவாதத்தைத் தொடர்வதும், விவாதத்தினூடாக ஜனநாயக சக்திகளின் இன்றைய கடமை பற்றிய ஒரு சரியான நிலைப்பாட்டுக்கு வர முயற்சிப்பதற்குமான ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நோக்கி இவ் விவாதத்தைத் தொடர வேண்டியது அவசியமாகிறது.

'விடுதலைப் புலிகளை ஆதரிக்க வேண்டும்' என்ற இந் நிலைப்பாடானது ஆற்றாமையின் வெளிப்பாடா?, அன்றி சித்தாந்தத்தை யாந்திரீகமாகப் பொருத்திப் பார்ப்பதன் தொடர்ச்சியா? அல்லது ஜனநாயக சக்திகளின் இன்றைய நீதியான தேவையும் கடமையும் இவையாகத்தான் இருக்குமா? போன்ற கேள்விகளையும் சந்தேகத்தையும் எழுப்புகிறது.

NLFT, PLFT, பாதுகாப்பு பேரவை போன்ற சிறிய ஜனநாயக அமைப்புகள் கருத்துக்களில் அதிக உடன்பாடு-களைக் கொண்டிருந்தும் தமக்குள் ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல் - ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்காமல்- விடுதலைப் புலிகளை ஆதரித்து, அவர்களுடன் ஐக்கியத்தைக் கட்டுவதற்கு முயற்சிக்கின்றன. இது எப்படியாவது தங்கள் செயற்பாட்டுக்கான தடையை நீக்கும் நோக்கமாக இருக்கலாம். ஆனால் இது கண்களை விற்றும் சித்திரத்தையும் பெறமுடியாத நிகழ்வாகாதா?

பேரவை தனது பிரசுரத்தில் TELO, EPRLF, ENDLF, PLOT, EROS ஆகிய இயக்கங்களுடன் ஒரே கட்டில் வைத்து NLFT, PLFT ஆகிய அமைப்புகளையும் சேர்த்துப் பார்த்திருப்பதானது குறைந்தபட்சம் ஒரு ஜனநாயக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்பு மீதான பார்வையாகக்கூட இல்லை.
மற்றைய இயக்கங்களை தடைசெய்யும்போது புலிகள் கூறிய காரணங்களை பட்டியலிட்டுக் காட்டும் 'பேரவை' அக் காரணங்களை 'பேரவை'யுடன் பொருத்திக் காட்ட முடியாது என ஒவ்வொன்றாக மறுதலிக்கிறது. இதன்மூலம் மற்றைய இயக்கங்களை அழிக்கும் உரிமையை தன்னை அறியாமலே 'பேரவை' அங்கீகரிப்பது போல் ஆகிவிடுகிறது. அப்படியானால் தன்னை அழிக்கும் உரிமையை புலிகளிடம் விட்டுவைத்து விட்டு புலிகளுடன் ஐக்கியம் என்பது தற்கொலையாக அமையாதா?

பொது எதிரிக்கு எதிராக சகல சக்திகளும் ஐக்கியப்பட வேண்டும் என்பது ஒரு நீதியான, நியாயமான வேண்டுகோள்தான்! . இட்லருக்கு எதிராக ஸ்ராலின் அமெரிக்கா, இங்கிலாந்துடன் ஐக்கியப்பட்டார்; யப்பானுக்கு எதிரான யுத்தத்தில் மாவோ, 'சியாங்கே சேக்' உடன் ஐக்கியப்பட்டார் என்பதை வரலாறு. இந்த வரலாற்றுக்கால ஸ்தூல நிலைமைகள் ஈழ விடுதலைப் போரில் காணப்படுகிறதா?. அங்கு மேலாண்மை பெற்ற சக்திகள் பொது எதிரிக்கெதிரான சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதில் ஜனநாயகத்தைப் பேணினார்கள். ஈழ விடுதலைப் போரில் அதிகாரம் பெற்ற சக்தியாக விளங்கும் விடுதலைப் புலிகள் மற்றைய சக்திகளுடன் ஜனநாயகத்தைப் பேணுகிறார்களா? அல்லது அவர்களுடனான ஐக்கியத்தை ஒப்புக்காகவேனும் ஏற்கிறார்களா?

NLFT யைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டு தாக்கப்பட்டபோது புலிகளால் உதிர்க்கப்பட்ட கூற்று

www.tamilarangam.net



ஒன்று நினைவுக்கு வருகிறது.

« EP, PLOT, TELO துரோகக் கும்பல்கள் – அவர்கள் தானாக அழிந்துவிடுவார்கள். உங்களைத்தான்ரா நாங்கள் அழிக்கோணும் » என்பதே அது!

தார்மீக பலத்துடன் இருக்கும் ஜனநாயக சக்திகள் இன்று சிறிய குழுக்களாகவோ உதிரிகளாகவோ இருப்பினும், நாளை பரிணமிக்கக் கூடிய வாய்ப்புகள் இவர்களுக்கு அதிகம் என்பதை புலிகள் மறைமுகமாக ஏற்கின்றனர். இச் சக்திகளுடன் ஐக்கியத்தை ஏற்படுத்தாவிடினும், அவர்களின் செயற்பாட்டை அங்கீகரிப்பதுகூட தமக்குத் தாமே தோண்டும் குழி என்பது புலிகளின் எண்ணம்.

ஆகவே எந்தத் தர்க்கரீதியில் நோக்கினாலும் பொது எதிரிக்கெதிராக ஜனநாயக சக்திகளின் ஐக்கியத்துக்குப் பதிலாக அவர்களின் அழிவே புலிகளின் நோக்காக அமையும்.

விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்கோ நிதியுதவி அளிப்பதற்கோ முதலில் ஜனநாயக சக்திகளின் முன்நிபந்தனைகளையாவது புலிகள் அங்கீகரித்தாக வேண்டும். குறைந்த பட்சம் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை வழங்கவும், ஒரே பிரதேசத்தில் வாழும் இன்னொரு இனக் குழுவுக்கெதிராக (முஸ்லிம் மக்களுக்கெதிராக) ஆயுதங்களை திருப்புவதை தடுக்கவும், அம் மக்களை அவர்களின் பாரம்பரிய பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவதை தடுப்பதற்குமான முன் நிபந்தனைகளைக் கூட விதிக்க முடியாத நிலையில் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு ஆதரவளிக்க முடியுமா? என்பது இன்னொரு கேள்வி.

www.tamilarangam.net



ஈழத்து ஜனநாயக சக்திகளைப் பொறுத்த வரை ஒரே வேளையில் இரண்டு விதமான பிரதான முரண்பாடுகளை எதிர்நோக்க வேண்டிய தர்ப்பாக்கிய நிலைமையில் உள்ளனர். முதலாவது, பாசிச இனஒடுக்கு முறை அரசு யந்திரத்துடனான முரண்பாடு. இரண்டாவது, ஈழ விடுதலை இயக்கங்களின் ஜனநாயக மறுப்புக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் எதிரான முரண்பாடு.

இதில் முதலாவது முரண்பாட்டை பிரதான முரண் பாடாக கருதி பாசிச அரசின் [புலிகளுக்கு எதிராக என்று கூறிக் கொண்டு இந்திய/இலங்கை அரசுகளுடன் கூடிச் சேரும் TELO, EPRLF, PLOT, ENDLF, EPDP துரோகக் கும்பல்-களை அம்பலப்படுத்துவதும் இதற்குள் அடங்கும்] இனஒடு-க்கு முறைக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடுகின்ற விடுதலை இயக்கத்துடன் இணைய வேண்டியது ஜனநாயக சக்திக ளின் கடமையாகிறது.

இன்றைய எங்கள் தாய் மண்ணின் சூழ்நிலை.... அடிப்படையில் ஜனநாயக சமூகத் தளத்தை இழந்திருக் கிறது. இது ஜனநாயக சக்திகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமற்ற நிலையைப் பேணுகிறது. இந் நிலையில் NLFT, PLFT, பேரவை போன்ற அமைப்புகள் ஜனநா-யக சக்திகளுக்குரிய அமைப்பு வடிவம் பெற்ற போதும் ஆயுத பலம், ஆட்பலம், தொடர்பு வலைப் பின்னல் ஆகிய பல அம்சங்களில் புலிகளிலும் பார்க்க பன்மடங்கு பலவீ-னப்பட்டிருப்பது கண்கூடு. சமூகத் தளமும், அமைப்பு வடிவமும் பலவீனமுற்றிருக்கும் இந் நிலையில் ஜனநா-யக சக்திகளின் புலிகளுடனான ஐக்கியம் EROS க்கு

www.tamilarangam.net



நேர்ந்த கதியையே முடிவாக்கும்.

ஆகவே மக்களின் அடிப்படையான தனிமனித உரிமை, மாற்றுக் கருத்துக்களையுடைய இயக்கங்களை அங்கீகரித்தல் போன்ற ஜனநாயகப் பாதுகாப்புக்குரிய முன் நிபந்தனைகள் இல்லாத பட்சத்தில் புலிகளுடனான ஐக்கியம் ஆபத்தானது.

புலிகள் இந்த முன் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வார்களா? இத்தகைய இக் கட்டான சூழ்நிலையை உடைப்பதற்கான ஜனநாயக சக்திகளின் செயற்பாடு எப்படி அமைய வேண்டும் என்பது, சிக்கல் நிறைந்த கேள்விக்குரிய பிரச்சினையாக உள்ளது என்பது உண்மையே! அத்துடன் பாசிசத்திற்கு எதிரான நடவடிக்கைகள் சார்பாக கோட்பாட்டு ரீதியான வழிவகைகள் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. ஒரு ஜனநாயக சமூகத்தை உருவாக்கும் நோக்கில் தமது செயற்பாடுகளை நகர்த்திக் கொள்வதே ஜனநாயக சக்தியின் முன்கடமை ஆகிறது.

இந் நேரத்தில் அனைத்துக்கும் மேலாக NLFT, PLFT, பேரவை போன்ற அமைப்புகள் தமக்கிடையிலான ஐக்கியத்தை வலுப்படுத்தி, அடிப்படை ஜனநாயகத்தை வழங்குவதற்கான நிர்ப்பந்தத்தை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

இம் முன்முயற்சிக்கு வெளிநாடுகளில் எம்மவர்க்கு காணப்படும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் பிரச்சார உரிமையையும் பயன்படுத்துவது பற்றியும் இச் சக்திகள்

www.tamilarangam.net



சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான அடிப்படை வேலைமுறைகளை (தமக்குள் ஐக்கியம், கூட்டு வேலைத்திட்டம், பிரச்சார முயற்சி போன்றன) அலட்சியப் படுத்தி, விடுதலைப் புலிகளிடம் ஐக்கியத்தைக் கோருகின்ற பாரிய வேலைத்திட்டங்களுக்கு முயற்சிப்பது வீணானதாகும்.

♦ கி.வாசன் ♦

# நீ பெண் என்றால் .....



இருவரும்
புரியும் முன்னமே
புதிராய்க் கிடைக்கும்!

வாழ்க்கையின் ஏக்கம்
வழிவழியாய்த் தாக்கும்
அடங்கிப் போ
சமுதாயம் உனக்கு வைத்த
அன்புக் கட்டளை

உனக்கிருக்கும் ஆசைகளை
உதறிவிடு
இனிவரும் காலங்களில்
கணவனுடன்
பிள்ளையுடன்
வாழ்ந்து விடு.
பெண் என்றால் அப்படித்தான்!

► இரா.லோகேசன் ◄

www.tamilarangam.net





# கறுப்புத் தலைகள்

சி.அமுதன்

சிறு கதை

குளிர், பகல் பொழுதைவிட அதிகமாகவே உறைக்கத் தொடங்கிற்று. இன்னும் கொஞ்சம் விரைவாகவே நடப்பேனாயின் 10 நிமிடங்கள் நடைவதற்குள் வீட்டுக்குப் போய்விடுவேன். இன்று 6 மணித்தியாலமாய் ஒரே வேலை. உடம்பு முழுவதுமே முறித்துப் போட்டதுபோல் அலுப்பு.

வீட்டிற்கு போனதும் கட்டிலில் விழ்ந்திடவேண்டும் இல்லையேல் விடிய 9 மணிக்கு திரும்ப வேலைக்குப் - போக முடியாது. இப்பவே நேரம் 1 மணியைத் தாண்டிவிட்டது. இந்த நேரத்தில் வீதியில் யாருமே திரிய மாட்டார்கள் நாளை வேலைநாள் என்றபடியால். வீதி வெறிச்சோடித் தான் கிடக்குது.

பலகைப் பாலத்தடி இரவு வந்தாலே சன சந்தடி இல்லாமல் தான் இருக்கும். நேற்றும் எனக்கு சங்கர் சொன்னான் « டேய் முரளி உந்தப் பலகைப் பாலத்தடியால இரவில கண்டபடி திரியாத அது கட்டுக்காய் உலாவுற இடம் »

நானும் இரவு நேரங்களில் கண்டபடி திரிவதில்லை. இருந்தும் என்ன செய்வது. வேலை பிந்தி முடிந்தால். இன்றெல்லாம் 11 மணிக்கெல்லாம் முடிந்திருக்க வேண்டும். ஆமிக்காரர்கள் 'பார்டி' (Party) இரவாய் அவர்கள் குடிப்பார்கள், பாடுவார்கள், போதை உச்சி ஏற சிலவேளை கத்தவும் செய்வார்கள். பாவம், கோப்பை - கிளாஸ் கழுவும் மெசினும் நானும் 'பார்டி' முடியவே 12-30 ஆகிவிட்டது.

www.tamilarangam.net



அதுதான் பலகைப்பாலம். அதை கடந்து விட்டால் வீட்டை போவதற்கு சமன்... வீதி வெளிச்சத்திற்கும் மேலாக ஒரு வெளிச்சம்..... அது ஒரு காரினுடையதாக இருக்கலாம். எதற்கும் திரும்பினேன். அது பொலிஸ் கார்தான் « அட கடவுளே இந்த பொன்னம்பலம் ஏன் இந்த நேரத்தில். நிச்சயமாக என்னை மறிக்குங்கள். எங்க எதுக்கு என்டு விசாரிக்குங்கள். விசா வேண்டி பார்க்குங்கள்... அரை மணித்தியாலம் தொலைஞ்சுது.» என் சிந்தனையை கிழிந்தது. என் கால்கள் அருகில் பாதையை உரசியது பொலிஸ் கார்.

காரினுள் இருந்தபடியே தலையை வெளியே நீட்டினான் டிறைவர். அதற்குள் வலப்புறத்தால் குதித்து வந்தான் இன்னொருவன். இவன் உயரமானவன். கொஞ்சம் ஒல்லியானவன்.

வோகின் கேஸ்ட் தூ ஜெந்ஸ்
இஸ் கேகே நவ் கவுச
கேஸ்ட் தூ கவுச
ஜா... ஜா.. கவுச
தூ முஸ் ஜைட்ஸ் மித் உன்ஸ் கொமன்.
வறாம் ....

இது என்ன கஸ்டகாலம். ஏன் என்னை பொலிஸ் ஸ்ரேசனுக்கு வரச்சொல்லுகிறார்கள். நான் என்ன குற்றம் செய்தேன். மீண்டும் திருப்பிக்கேட்டேன் ஏன் என்னை பொலிஸ் நிலையத்திற்கு வரச்சொல்லுகின்றீர்கள்? அவன் எனது கேள்வியை காதில் போட்டதாய் தெரியவில்லை. காரின் பின் சீட்டில் உட்காரும்படி, கதவை திறந்து நீட்டினான்.

'கொம் சினல்'

காரைச் செலுத்தியவன் அதட்டினான். இப்போது நான் இந்தக்கணத்தில் என்னுள் மெலிந்துபோவதாய் உணர்கிறேன். ஒருவித பயம் என் மனப்பரப்பு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்கிறது.

கார் பலகைப் பாலத்தடியை அழுத்தியது... கோடை காலத்தில் எல்லாம் வேகமாய் ஓசை எழுப்பி ஓடும் இந்த ஆறு இப்போது உறைந்து கிடந்தது. சூழ உள்ள மரங்கள் வெறும் தண்டுகள் மட்டுமே சுமந்திருந்தது. தண்டுகளிலும் மரத்தை அண்டிய நிலப் பகுதிகளிலும் பனித்துணிகள் சிதறி இருந்தன.

இப்போது இந்த இரு பொலிசாரும் என்னை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்கிறார்கள். என்னை பிடித்துக் கொண்டு செல்வதற்கான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காரணம் தெரியவில்லை. ஏன் என்னை கைது செய்தீர்கள் என்று கேட்கும் நிலையிலும் நான் இல்லை.

பொலிஸ் காரில் மின்னிக் கொண்டிருக்கும் அந்த நீல வெளிச்சமும் அதன் வேகமும் என்னுள் பய உணர்வை மேலும் அதிகம் உற்பத்தியாக்குகிறது. முகம் மட்டுமல்ல உடம்பு முழுவதுமே வியர்த்து கொட்டத்தொடங்கிறது. கொஞ்சம் காற்று உள்ளே வருமாயின் சுகமாயிருக்கும். ஜன்னல் எல்லாம் பூட்டப்பட்டிருந்தது. எனது பார்வையில் இருள் படர்ந்து கொண்டது.

ஏன் என்னை இந்த பொலிஸ் காறர்கள் கைது செய்தார்கள், என்ற கேள்வி திக் கத்தையாய் என் மனதில் பரவிக் கொண்டது.

எதற்காக இவர்கள் என்னை கைது செய்தார்கள். நான் அப்படி ஒரு குற்றமும் செய்யவில்லையே...

முன்பெல்லாம் எம்மவர்களை பொலிஸ் அதிகமாக பிடிப்பார்கள். போதைப் பொருள் குற்றத்தைக் காரணம் காட்டி. ஆனால் இப்போ அது கூட இல்லை.

காரை மறித்தது முச்சந்தியிலுள்ள சிக்னல் சிவப்பு விளக்கு. பொலிஸ் காரை கண்டு மரியாதை செலுத்தி சரியாக நின்றது. கிழக்குப் பக்க வீதியில் நின்ற இரண்டு கார்கள் ஒன்று வெள்ளை, மற்றது மண்ணிறம்.

பச்சை விளக்கு விழுந்தது. இந்த இரண்டு பொலிசாரும் தங்களுக்குள் ஏதோ கதைத்தார்கள் பின்பு கொஞ்ச நேரம் சிரித்தனர்.

என் மனமும் கொஞ்சம் கனம் குறைவது போல் இருந்தது. இருந்தும் எதற்காக என்னை கைதுசெய்தார்கள்... ஸ்ரேசனுக்கு கூட்டிப் போய் என்ன செய்வார்களோ என்பதை நினைக்கும்போது... மீண்டும் இதயம் பாரமாகியது. மனதை கொஞ்சம் நிமிர்த்தி படுத்திக் கொண்டு ஏன் என்னை கைது செய்தீர்கள் என்று கேட்க நிமிர்ந்தேன். அதற்குள் பூதமாய் ஒரு ப்பீ....ப்பீ....

காரை ஓடிய அந்த பெருத்த உடம்பு பொலிசுதான் ரெலிபோனை எடுத்து விரைவாகவே கதைத்தான். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை

இப்போது பொலிஸ் கார் மெயின் வீதியை மாறந்து ஸ்ரட்டுக்குள்

www.tamilarangam.net



நுழைந்தது.

எனது மனதில் ஒரு வெளிச்சம். நேற்றைய வானொலிச் செய்தி இந்த நேரத்தில் என் மனச் சுருளில் இருந்து அவிழ்ந்தது.

நேற்று மத்தியானம் 12·30 மணி செய்தியின்போது வேலை செய்யும் இடத்தில் இருந்தேன். தோமஸ்தான் செய்தி கேட்டான்.

'ஏய் முரளி உங்களை எல்லாம் பொலீசு பிடிக்க போகிறார்கள்'

ஏன்

வளைகுடா யுத்தத்தில் அமெரிக்கா நேசப்படைகள் வெற்றிகரமாக தாக்குதலை நடத்துகிறார்களாம். ஈராக் இராணுவம் பலவீனமாகிவிட்டதாம். இந்த நேரத்தில் ஈராக், பாலஸ்தீன பயங்கரவாதிகள் மேற்கு ஐரோப்பாவில் குண்டுகளை வைக்கக்கூடுமாம் அதற்காக எல்லா சுவிஸ் கன்டோன் பொலீசும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளதாம். சந்தேகத்துக்கிடமான வெளிநாட்டுக் காரர்களை கைது செய்வார்களாம்

இவ்வளவு செய்தியையும் மிகவும் கஸ்ரப்பட்டே தோமஸ் எனக்கு சொல்லி முடித்தான். எனக்கு ஜேர்மன் மொழி அவ்வளவு தெரியாது.

இந்த இரு பொலீசும் என்னை இதற்காகவா கைது செய்திருப்பார்கள். எனது தாய் மண்ணில் மட்டுமல்ல ... தப்பிவாழ வந்த மண்ணிலும் நானொரு பயங்கர வாதியா .. இல்லை ... இல்லை, நான் இல்லை என்று கூறலாம். ஆனால் இந்த இரு பொலீஸ்காரர்கள் விட்டு விடுவார்களா ?.

ஓ.... இப்போது மீண்டும் என் உடம்பு முழுவதும் இயங்கு சக்தியை மெல்ல மெல்ல இழந்து வருவது போன்று ஒரு உணர்வு.

'இறங்கு ஸ்டேசனுக்கு வந்து விட்டோம்.'

உயரமான ஒல்லிய பொலீசுதான் சொன்னான். பொலீஸ் கார் MIGROS வலது பக்கமாகவுள்ள ஸ்டேசனில்தான் நிறுத்தப்பட்டது. இந்த பொலீஸ் நிலையத்தை நான் ஸ்ரட்டுக்கு வரும் போது பார்த்திருக்கிறேன்.

உயரமான ஒல்லியான பொலீஸ்காரன் முன்னுக்கும் அவன் முதுகுப்புறமாக நானும் எனக்கு அருகில் கார் ஓடிய பொலீசுமாக ஸ்டேசனுக்குள் கூட்டி

www.tamilarangam.net



சென்றனர்.

என் கையில் விலங்கிடப்படவில்லை சிலவேளை நான் தப்பி ஓடிவிடுவேன் என்பது போல் என்னை இந்த பொலீஸ் காரர்கள் மிகவும் அவதானித்தனர்.

ஸ்ரேசன் வாசல் கதவை நெருங்க நெருங்க என் இதயம் பாரமாகிக்கொண்டிருந்தது. கைகளிலும், கால்களிலும் ஒரு வித்தியாசமான நடுக்கம்.

உள்ளங்கைகளில் விரல்களை இறுக்கியபடி நிமிர்ந்து நடந்தேன். வாசல் கதவை கடந்து வலது புறமாக இருந்த ஒரு அறையினுள்ளே என்னை அழைத்துச் சென்றனர்.

என்ன ஆச்சரியம்... அந்த அறையில் பத்துக்குமதிகமான கறுத்தத்தலையினர் கதிரையில் இருந்தனர். அதில் ஒருவர் பாகிஸ்தானி. அவரும் நான் இருக்கும் மாடியில் 3ம் நம்பரில் வசிப்பவர்.

அந்த இரு பொலீசும் என்னை இங்கு இருக்கும்படி கூறிவிட்டு எங்கு போனார்களோ தெரியாது.

எனது பார்வை இந்த அறை முழுவதையும் ஒரு முறை தொட்டது. பாவங்கள் இவர்களும் என்னைப்போல அப்பாவிகள் தானோ இவர்களுக்கும் என்னைப்போல விசய வேலையாகத் தான் இருக்குமோ எத்தனை மணிக்கு எங்களை பொலீஸ் விடுவாங்களோ. இல்லை... தடுத்துத்தான் வைப்பார்-களோ... ஐயோ அப்படி செய்வார்களாயின்.. வேலை செய்யும் இட-த்தில் ஒரு கிழமை இதுவே கதையாக இருக்கும். பின்பு வேலை செய்ய முடியாது. என்ன நிகழுமோ.. முகம் மீண்டும் வியர்க்கத் தொடங்கியது.

இங்கு இருப்பவர்களில் இரண்டு பேர் துருக்கியர்கள். அவர்கள் தங்-களுக்குள்ளே கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் இலத்தீன் அமெரிக்கக் காரர். மற்றவர்கள் எந்த நாட்டுக்கா-ரரோ விளங்கவில்லை.

அறைக் கதவு திறந்தது. ஒரு பொலீஸ் காரன் வந்து கொண்டிருந்தான்.

அவனது கையில் ஒரு பெரிய குறிப்பு புத்தகம் இருந்தது. நிட்சயமாக இவன் ஒரு பொலீஸ் அதிகாரியாகத்தான் இருக்க வேண்டும். எங்கள் எல்லோருக்கும் வணக்கம் சொன்னான்.

www.tamilarangam.net



தனது பெயர் தோர்கர் எர்வின் என்றான். தனக்கு ஆங்கிலம் அவ்வளவு பேசமுடியாது ... அதனால் ஜேர்மன் மொழியில் மட்டுமே பேசுவதாகவும் சொன்னான் இந்த அறையில் இருந்த எல்லா தலைகளுமே 'சரி' என்று ஆடின.

உங்களை ஏன் இங்கு கைது செய்து வைத்திருக்கிறோம் தெரியுமா ?

தெரியாது என்பதை உறுதிப்படுத்தின கறுப்புத் தலைகள்.

இன்று இரவு பதினொரு மணிக்கும் பன்னிரண்டு மணிக்குமிடையில் பல-கைப் பாலத்தடியில் வைத்து ஒரு சுவிஸ் இளைஞன் மோசமாக தாக்-கப்பட்டுள்ளான். அவன் தற்போது வைத்தியசாலையில் மயக்கம் தெ-ளியாத நிலையில் உள்ளான். அவனது தந்தையோ வெளிநாட்-டுக்காரர்கள்தான் தன் மகனை தாக்கியிருக்க வேண்டும் என்று சொல்லுகின்றார். எதற்கும் மய-க்கம் தெளிய அந்த இளைஞன் இங்கு வருவான் அடையாளம் காட்டுவான். அதுவரை நீங்கள் இருக்க வேண்டும்.

தொக் டொச்சிலேயே இந்த அதிகாரி கதைத்ததால் என்னால் விளங்கிக் கொள்ளமுடிந்தது.

அதேநேரம் ஒருவித ஆத்திர உணர்வு என்னுள் பீறிட்டது.

இதே நாட்டிலேதான் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு தமிழர் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. இரு குழந்தை உட்பட நான்கு பேர் மாண்டு போயினர். போன வருடத்திலும்கூட ஒரு அகதி மீது பயங்கரமான தாக்குதல் நடாத்தி அவனும் மாண்டு போனான். இந்த தாக்குதல்களை யார் நிகழ்த்தி-னார்கள்? அவர்களை கண்டு பிடித்துவிட்டதா இந்த பொலீஸ்?

ஆனால் ஒரு சுவிஸ் இளைஞன் தாக்கப்பட்டுவிட்டான் என்றபோது எவ்-வளவு பொறுப்புணர்வுடன் இருக்கிறார்கள் இவர்கள்.

முகத்தில் துளித்த நீர்த்துளிகள் கண்களினூடாக உடைந்தன... ஆயினும் இது கண்ணீர்த் துளிகள் அல்ல.. கைக்குட்டையை எடுத்து துடைத்துக்கொள்கிறேன்.. வியர்வைத்துளிகளை.

www.tamilarangam.net



# ஓய்ந்ததா பாலைவனப் புயல்?



வளைகுடாவில் மையம் கொண்டு உலகையே அச்சுறுத்திக்
கொண்டிருந்த பாலைவனப்புயல் ஈராக் நாட்டை தரைமட்
டமாக்கி பலலட்சக்கணக்கான ஈராக் மக்களை பலிகொண்ட
தன் மூலமும் ஈராக்படைகளை பின்வாங்கச் செய்து சற்றுத்தணி
ந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டுப்படை
களும் குவைத்தை மீண்டும் அதன் மன்னர்களுக்கும் சேக்குகளு
க்கும் சொந்தமாக்கிவிட்டனர். ஈராக் குவைத்தை ஆக்கிரமிப்பு
செய்தநாளில் இருந்து ஐ.நா.வினால் விதிக்கப்பட்ட பொருளா
தாரத்தடைகள் காரணமாக உணவுப்பற்றாக்குறையினாலும்
மருத்துவவசதியின்மையாலும் துன்பப்பட்ட ஈராக் மக்களின்
நிலை யுத்தத்தினால் மேலும் மோசமடைந்தது. இவற்றால் பாதிக்
கப்பட்ட மக்களும், சதாமின் சர்வாதிகாரத்தினால் அடக்கி
வைக்கப்பட்டிருந்த எதிர்கட்சிகளும், குர்திஸ் தேசிய இனமக்
களும் சதாமின் ஆட்சிக்கெதிரான கலவரங்களில் இறங்கி

www.tamilarangam.net



ஈராக் முழுவதுமே பெரும் உள்நாட்டுக் கலவரத்திற்கு உள்ளாகியுள்ளது பல நகரங்களில் சதாமின் பாத்கட்சியினர் விரட்டியடிக்கப்பட்டதாகவும், குர்திஸ் மக்களின் போராளிகள் பல கிராமங்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாகவும், ஈராக்கின் பல்வேறு பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் பலர் கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து கொண்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அதே நேரம் சதாம் தனது படைகளுக்கு கிளர்ச்சிகளை அடக்குவதற்கு அதிகபட்ச நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார். ஈராக்கிய மக்களுக்கு அமெரிக்க எதிர்ப்புணர்வு, அரபு ஒற்றுமை, சதாமின் போலியான வாக்குறுதிகள் போன்றவற்றில் சதாமின் ஒடுக்குமுறைகளையெல்லாம் மறந்த உற்சாகம் இருந்ததென்பது உண்மையே. ஆனால் அமெரிக்காவினதும் அதன் கூட்டப்படைகளினதும் குண்டுவீச்சினாலும் சதாமினது கையாலாகாத்தனத்தினாலும் இப்பேரளவு அழிவுகளையும் சந்திக்க வேண்டியேற்பட்டதென்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர். அதன் வெளிப்பாடாகவே சதாமின் ஆட்சிக்கெதிரான இன்றைய கலவரங்கள் நோக்க வேண்டியுள்ளது.

யுத்தம் ஆரம்பிக்கும் முன்னர் இழப்புகள் எதுவுமின்றி குவைத்தை விட்டு வெளியேறுவதற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருந்தபோதெல்லாம் அவற்றை தட்டிக்கழித்து விட்டு ஈராக்கின் வளங்களில் பெரும்பகுதி அழிவுக்குட்பட்டு 50000 ற்கு மேலான தனது படையினர் சரணடைந்து, குவைத்துக்குள் மட்டுமன்றி ஈராக்கிற்குள்ளும் எதிரியின் படைகள் நுழைந்தபின் ரஷ்சியாவின் தயவில் பதவியை காப்பாற்றிக் கொள்வதற்காக எதுவித நிபந்தனையும் இன்றி பின்வாங்கியமையும் அதன் பின்னர் ஐ.நா வினால் வைக்கப்பட்ட

www.tamilarangam.net



நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டமையையும் நோக்கும்போது சதாமிற்கு பதவிமீதுள்ள வெறியினைக் கண்டு கொள்ள முடிகின்றது. ஆனால் நிகழும் கலவரங்கள் வைத்துப் பார்க்கும் போது அவர் பதவியில் எவ்வளவு காலம் நின்றுபிடிப்பாரென்பது சந்தேகமாகவேயுள்ளது. இக்கலவரங்களின் மூலம் சதாமை பதவியிலிருந்து கவிழ்ப்பதற்கு அமெரிக்கா குறிவைத்து செயற்படுகின்றது. கலவரங்கள் அடக்குவதற்கு இரசாயன ஆயுதங்கள் பாவிக்கக் கூடாது என மிரட்டுவதன் மூலமும், கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதன் மூலமும், கலவரங்களில் பாதிக்கப்பட்டு அமெரிக்கப்படைகளின் முகாம்களுக்குள் வரும் மக்களுக்கு உதவுவதன் மூலமும் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி வருகின்றது. இக்கலவரங்கள் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட தன்மையின் கீழோ அன்றி நன்கு திட்டமிடப்பட்டோ நிகழ்த்தப்படாமையால் சதாம் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டாலும் அமெரிக்கா சார்பான அரசே எதிர்காலத்தில் அமையக் கூடிய சூழ்நிலைகள் இன்றே உணரமுடிகின்றது. அதுவே அமெரிக்காவின் உள்நோக்கமும் கூட.

சதாம் உசைன் ஈராக்கின் மன்னர் ஆட்சிக்கெதிரான ஒப்பீட்டளவில் ஜனநாயகத்திற்கான போராட்டங்களில் பங்கெடுத்ததன் ஊடாகவே ஈராக்கின் அரசியலில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்திற்கு தன்னை உயர்த்திக் கொண்டபின் பல சதிகளின் மூலமும் உட்கொலைகளின் மூலமும் ஈராக்கின் தலைமையைக் கைப்பற்றி அங்கு தொடர்ச்சியாக நிகழ்ந்த போராட்டங்கள் நசுக்கியும் பல்லாயிரக்கணக்கான இடதுசாரிகள் கொலை செய்ததன் மூலமாகவும் தன்னை ஒரு சர்வாதிகாரியாக உருவாக்கிக் கொண்டவர். ஈரானுடன்

www.tamilarangam.net



வலிந்து யுத்தம் தொடுத்து பல்லாயிரக்கணக்கான ஈராக்மக்களை யுத்தத்தில் பலிகொடுத்தும் யுத்தத்தை எதிர்த்த ஈராக்மக்களை யும், ராணுவ அதிகாரிகளையும் படுகொலை செய்ததுடன் ஈராக்கின் வளங்கள் முழுவதையும் யுத்தத்திற்காகவே செலவிட்டதுடன் வெளிநாடுகளிடமும் கடன் பெற்று 8 ஆண்டுகள் யுத்தம் புரிந்து இறுதியில் கடன் பளுதாங்காது தானாகவே யுத்தத்தி லிருந்து விலகிக் கொண்டவர் இவ்யுத்தத்தினால் திவாலா கிப்போன ஈராக்கின் பொருளாதாரத்தை ஈடுசெய்வதற் கான ஒரே வழியாகவே குவைத் ஆக்கிரமிப்பை மேற் கொண்டுவிட்டு பின்னதாக தனக்கு சாதகமான காரணங்களை கற்பித்தார். ஈராக் தனது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள எண்ணெய் வளங்களை குவைத் திருடிய பிரச்சனையை சர்வதேச அரங்கிற்கு கொண்டுவராமை எண்ணெய் உற்ப த்தி விலை நிர்ணயம் என்பவற்றில் சுயமாக நடந்து கொள் வதனை தடுப்பதற்கான முயற்சியை ஏனைய அரபு நாடுகளுடன் இணைந்து குவைத்தை நிர்ப்பந்திக்காமை, பாலஸ்தீனப்பிரதேசங் களை விட்டு இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்ற கோ ரிக்கையை ஆக்கிரமிப்புக்கு முன்னர் முன்வைக்காது ஆக்கி ரமிப்புக்கு பின்னர் இவற்றைக் கூறியமை தனது ஆக்கிர மிப்பை நியாயப்படுத்துவதற்கேயாகும்.

சதாமின் உள்நோக்கத்தை உணர்ந்து கொள் ளாது பாலஸ்தீன மக்களும் அதன் விடுதலைக்காக போராடும் அமைப்புக்களும் சதாமை ஆதரித்தமை அவர்களது நியா யமான போராட்டத்தில் நீங்கமுடியாத கறையை ஏற்ப டுத்தியுள்ளதுடன் பாலஸ்தீனரின் போராட்டத்திற்கு உதவி புரிந்துவந்த நாடுகளின் கண்டனத்திற்கும் உள்ளாகியுள்

www.tamilarangam.net



ளது. குவைத்திலும் சவுதிஅரேபியாவிலும் இருந்து பாலஸ்தீனமக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ராக்கெட் அச்சுறுத்தலை காரணம் காட்டி மேலும் அதிசக்தி வாய்ந்த ஆயுதங்கள் ஏகாதிபத்தியங்களிடம் இருந்து இலவசமாகப் பெற்று மேற்காசியாவின் பலமிக்க இராணுவத்தை மேலும் பலமாக்கியுள்ளது இஸ்ரேல். பாலஸ்தீனத்துக்கு மட்டுமல்ல ஏனைய அரபு நாடுகளுக்கும் இந்நடவடிக்கை பீதியையூட்டியுள்ளது. இத்தகைய பாதகமான அம்சங்கள் எல்லாம் கணக்கில் எடுக்காது யுத்தத்தை உண்டு பண்ணக் காரணமாக இருந்த சதாம் அரபு மக்களாலும் ஜனநாயகத்தை நேசிக்கும் உலகமக்களாலும் மன்னிக்கமுடியாத குற்றவாளியே.

சதாமின் ஆக்கிரமிப்பு தவறானது என்பது ஒருபுறம் இருக்க அமெரிக்காவும் அதன் யுத்தக்கூட்டாளிகளான இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி போன்றன இவ்யுத்தத்தை எவ்வாறு நடத்தினார்கள் என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது. இந்நாடுகள் குவைத்தை மீட்க வேண்டும் என்பது குவைத்தின் இறைமையை பாதுகாக்கவேண்டும் சிறுநாடுகளை பெரிய நாடுகள் ஆக்கிரமிப்பதை தடை செய்யவேண்டும் என்பதற்காகவல்ல குவைத்தினதும், சவூதிஅரேபியா உட்பட்ட ஏனைய அரபுநாடுகளினதும் எண்ணெய் வளத்தை கொள்ளையிடுவதற்கும் அங்குள்ள தமது முதலீடுகளையும் சந்தைகளையும் காப்பாற்றிக்கொள்வதற்கேயாகும். இத்தகைய நோக்கங்களுக்கு சதாம் தடையாகி விட்டமையே இவ்வாறு மூர்க்கமான யுத்தத்தில் இறங்கினர். குவைத்தில் இருந்து ஈராக்

www.tamilarangam.net



படைகள் வெளியேற்றுவதற்கு மட்டுமே ஐ.நா வில் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் யுத்தம் இடம் பெற்றது முழுக்க ஈராக்கின் முக்கிய நகரங்கள் பொருளாதாரமையங்கள், மக்கள் குடியிருப்புக்களை நோக்கியே. எனவே சதாமை ஒழித்துக்கட்டி தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கேயாகும். குவைத்தை மீட்பதற்கு ஐ.நா வில் ஆதரவளித்த பலநாடுகள் ஈராக்கின் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் கண்டித்தமையை காணமுடிந்தது.

அமெரிக்கா இந்த யுத்தத்தில் ஏன் ஈடுபட்டது என்பதன் தற்போது வரும் செய்திகளின் ஊடாக தெளிவாக அம்பலமாகின்றது. குவைத்தை அதிகஜனநாயகத்தை கொண்ட கம்யூட்டர்மயமான நாடாக மாற்றியமைக்கப் போவதாகவும் குவைத் கேட்டுக் கொண்டால் படைகள் குவைத்தில் தங்கியிருக்கும் என புஷ் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் சதாம் பலவீனப்பட்டுள்ள இன்றைய நிலையில் சதாமின் பாத்திரத்தை ஈ.ரான் எடுத்துவிடக்கூடும் என்பதால் ஈ.ரானுடன் உறவை ஏற்படுத்த ஈ.ரானுக்கு தொடர்ந்து அழைப்பு விடுக்கப்படுகின்றது. யுத்தத்தில் ஈ.ராக்கிலெவ்வளவு அழிவுக்குள்ளாகி முடமாகிப்போன பின்னும் ஈ.ராக் மீதான பொருளாதாரத் தடையை நீக்கவேண்டுமென ஏனைய நாடுகள் கொண்டு வந்த பிரேரணைகளை தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் நிராகரித்து விடுவதுடன் வளைகுடாவில் அமைதி நிலவவேண்டுமானால் சர்வதேச படையொன்று வளைகுடாவில் நிலைகொள்ளவேண்டும் என கோரியிருக்கின்றார். இவற்றின் மூலம் அமெ

www.tamilarangam.net


ரிக்காவின் உள்நோக்கம் என்னவென்பது தெளிவாகின்றது.

நடந்து முடிவடைந்துள்ள இவ்யுத்தமும் யுத்தம் ஏற்படுத்திய அழிவுகளும், அமெரிக்காவினது பிரச்சாரங்களும் மூன்றும் உலகநாட்டுமக்களுக்கு ஓர் அச்சத்தை உண்டுபண்ணுவதற்குரிய சந்தர்ப்பமாக அமெரிக்கா கருதுகின்றது. ஆனால் இவ் யுத்தம் ஆதிக்கவெறி கொண்ட அமெரிக்கா எதுவித தார்மீகபலமுமற்ற ஆக்கிரமிப்பாளன் சதாமிற்கெதிராக நடத்திய யுத்தமாகும். உண்மையில் இதுவோர் ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தமல்ல. ஒரு தேசிய விடுதலை யுத்தத்துடன் இதனை ஒப்பிட்டுவிட முடியாது. ஒரு தேசிய விடுதலை யுத்தத்தின் போது உலகமக்களின் தார்மீக பலம் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவே அமையும். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏகாதிபத்தியங்களின் தோல்வி நிச்சயமானதே.

• வரதன்

---

◀ 10ம் பக்கம்

அமெரிக்கா வளைகுடாவில் யுத்தத்தை நடாத்துவது நியாயமானது என்று கூறும் வகையில் ஒரு கருத்துப் படிமத்தை பரவவிட்டன.

வளைகுடாவில் மட்டுமல்ல பனாமாவில், கிரனடாவில், நிக்கராகுவாவிலும்... ஏன் வியட்நாமிலும் கூட அமெரிக்கா யுத்தம் நடாத்துவது நியாயமானது என்ற கருத்தைத் தான் இந்த மேற்குலக செய்தி நிறுவனங்கள் அன்றும் வெளியிட்டன.

இருப்பினும் உயிரைப் பணயம் வைத்து உண்மைச் செய்திகளை கொண்டு வர முயன்ற/முயலும் தனிப்பட்ட செய்தியாளர்கள் அமெரிக்க - ஈராக் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு அவர்களது செய்திகள் பறிமுதல் செய்யப்பட்டு, சிறையில் அடைத்து துன்புறுத்தப்படுவதை நாம் மறந்து விடக் கூடாது. இந்த ஆக்கிரமிப்பு இராணுவங்களின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு இன்னமும் உண்மைச் செய்தியாளர்கள் தமது பணியை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இவர்கள் தரும் செய்தி தான் வளைகுடா யுத்தத்தின் உண்மை விளைவுகளை அம்பலப்படுத்தும்.

• க.தீபன்

www.tamilarangam.net



# என்றுதான் வருமோ ?

உதிர ஓடைகள் தாராளமாய்
இந்த சின்ன தேசத்தில்
பஞ்சங்கள் வரிசைகளில்
பழைய டயர்கள்

பாதி டயர்களுக்கும்
மீதி நாய்களுக்கும்
பலியாகிப் போன
மனித உடல்கள்

தேவ கானங்கள் ஒலிக்கும்
தேவாலயங்களில்
தேவாங்குகளின் கூக்குரல்

அருள் மறையாம் திருமறையில்
குருதி முத்திரைகள்
மகுதியில் ஒலிக்கும்
மரண ஓலங்கள்

இவைகளுக்கோர் விடிவு
என்றுதான் வருமோ ?

எஸ்.எம்.எ
இலங்கை.

www.tamilarangam.net



# றேக்கே இசையும் பொப்மாலியும்

• ரீட்டா பொரல்                                    தமிழில்: தேவா

"போதியளவு உணவு ஒருவனுக்கு இருந்தாலும் அதை வயிற்றுக்குள் திணிப்பதை விட வாழ்வில் உயர்ந்த காரியங்கள் இருக்கின்றன". பொப்மாலி.

றேக்கே இசைக் கலைஞர்களின் இந்தக் குணாம்சமே தங்கள் செல்வத்திற்காக மாத்திரமல்லாது அதிலும் உயர்ந்த இலட்சியங்களுக்காக தமது இசையினைப் பயன்படுத்தத் தூண்டியது.

றேக்கே கலைஞர்கள் ஜமேக்கா பூர்சுவாக்களின் அரசியலுக்கு எதிராக கலகம் விளைவிப்பதை மாத்திரம் தீர்வாகக் கொள்ளாது. அதற்கு மேல் வேறொன்றைத் தீர்வாகக் கொண்டிருந்தால் - வர்க்கப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அரசுக்கெதிரான போராட்டத்தை சரியான முறையில் முன்னெடுத்திருக்க முடியும். இதை விடுத்து இந்த அரசுக்குப் பதிலாக தங்கள் பூர்வீக ராஜ்ஜியமான பபிலோன் (ஆபிரிக்கா) ஐ எவ்வித பின்விளைவுகளுமின்றி இசையிலமே அடைந்துவிட முடியுமென்று கருதினார்கள். இதற்காகவே இவர்கள் அரசால் தண்டிக்கப்பட்டார்கள். சிறைச்சாலைகளில் குற்றவாளிகளாகவும், தெருவோரத்தில் மரணத்தை சந்திப்பவர்களாகவும் கூட இருந்தார்கள். சர்வதேசப் பத்திரிகைகள் இவற்றைச் செய்தியாக வெளியிட்டு "கருத்தற்றதாகக் கணித்தன. பல றேக்கே கலைஞர்கள் பொலிசாரின் தாக்குதல்களுக்குப் பலியாகினர். சிறைகளில் அடைக்கப்பட்டும் இசைதட்டுக்களுக்குத் தடையும் விதித்தனர். அமெரிக்கதாசனான சேகாவின் ஆட்சிக்குப் பதிலாக ஆட்சியேற்ற மான்லியின் மாற்று "சோஷலிச" அரசாங்கம் கூட இவர்களுக்குப் பாதுகாப்பானதாக இருக்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதைப்பற்றி 1978 இல் பொப்மாலி குறிப்பிடும்போது:-

"அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாதவர்களால் இவைகளைப் புரிந்துகொள்ளமுடியாது புரிந்து கொள்ளவும் கஸ்டமானது. இந்த நாட்டில் ஒருவர் என்னைப் பார்த்து உனக்குப் பாதுகாப்பு தேவை என்கிறார் இதன் அர்த்தம் என்ன என்று எனக்குக் கூறுவீர்களா? நான் தெருவில் நடந்து கொண்டிருக்கும் போது ஒரு பெரிய அரசியல்வாதி உனக்குப்பாதுகாப்புத் தேவை மாலி எனக் கூறினால் இது என்ன? அவர்கள் தானே இந்த நாட்டை ஆள்கிறார்கள் அவர்களே என்னைப் பார்த்து உனக்குப் பாதுகாப்பு தேவை எனவும் கூறுகிறார்கள் " என்று அன்றைய நிலை பற்றிக் குறிப்பிட்டார்.

ரெக்கே இசை அமெரிக்கச் சந்தையில் ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்தும் சிலவற்றை அறிந்து கொள்ளலாம். அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் கூட அமெரிக்க மக்கள் இயக்கங்கள் இப்படியான மாறுபட்ட சமூக அரசியல் நோக்குள்ளவர்களை பிரபலப்படுத்தவில்லை. முதன் முறையாக (ISLAND RECORDS) ஐலன் இசைத்தட்டுக்கொம்பனி பொப்மாலி குழுவினரைப் பிரபல்யப்படுத்தி அவர்களது இசையை மக்கள் மத்தியில் 1972இல் அறிமுகப்படுத்தியும் வைத்தது. பின்பு இதேகம்பனி 1976ல் ரஸ்தா மான் வைபரேசன் (RASTA MAN VIBARATION) என்ற இசைக்குழுவினரை பொப் மாலியின் இசையை வீழ்த்துவதற்காக இலட்சக்கணக்கான அமெரிக்க டொலரை வீசி முயற்சி செய்தது. இதே காலகட்டத்தில் மிகப்பெரிய அமெரிக்க மக்கள் தொடர்புக் கொம்பனி கொலம்பிய ஒலிபரப்பு தாபனம் (COLAMBIA BROADCASTING) பீட்டர் ரொஸ்இன் ரெக்கே இசையை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த முயற்சிகள் செய்தன. வெர்ஜின் இசைத் தட்டுக் கம்பனி (இங்கிலாந்து) கைநிறையப் பணத்துடன் ஜமேக்காவிற்குச் சென்று ரெக்கே இசைக் கலைஞர்களுடன் ஒப்பந்தங்களைப் போட்டு ஐலன் கம்பனியின் ரெக்கே மீதான ஆதிக்கத்தை முறியடிக்கவும் முயற்சிகள் செய்தது. ஆனால் அமெரிக்கப் பத்திரிகைகள் ரெக்கேதான் இப்

www.tamilarangam.net



போதைய நிலையில் சிறந்த இசையெனப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தது.

ஆரம்பகாலங்களில் குறிப்பிட்ட மக்கள் மத்தியில் மாத்திரம் செல்வாக்கினைப் பெற்றிருந்த றேகே இசை "THE HARDER THEY COME" என்ற படம் திரையிடப்பட்ட எல்லா இடங்களிலும் பிரபல்யமாகி ரேடியோக்களில் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டு வந்தது.

இதற்கான விளக்கம் மிகச் சிக்கலானது.

"பொப்" இசை தனது செல்வாக்கை இழந்த நேரமாகவும் அதே வேளையில் "றொக்" இசை திறந்த வெளியரங்குகளில் மாத்திரம் நடத்தப்பட்டதாலும் இசை விரும்பும் ஒருவருக்கு றெக்கே இசையே மாற்றாகக் கிடைத்தது. இதே சக்திதான் இசை வியாபாரிகளுக்கும் இருந்தது. இந்நிலையில் தலைசிறந்த இசைக் கலைஞர்கள் ஜமேக்காவில் வெளிப்படுவதை ஸ்ரீவ் வொண்டர் (STEVIE WONDER) போன்ற கறுப்பின இசைக் கலைஞர்களும் எரிக்கிளப்டன் (ERICK CLAPTON) போன்ற ஆங்கிலேய இசைக் கலைஞர்களும் கண்டார்கள் ஸ்ரீவ் வொண்டர் றெக்கே இசையையும் தனது இசைக்குப் பயன்படுத்தினார். ஆனால் எரிக்கிளப்டனோ தனக்கே உரிய பாணியில் பொப்மாலியின் பாடல்களை பாடி பணம் சம்பாதித்துக் கொண்டான். [வியக்கத்தக்க முறையில் பொப்மாலியின் I shot the sheriff என்ற பாடல் எரிக்கிளப்டனால் பாடப்பட்டு மாலியின் பாடலைவிட மிக அதிகளவு ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. ஜமேக்காவிலும் இதே நிலைதான் பொப்மாலியை புகழின் உச்சியில் இருந்து தள்ளி அவரை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க எடுத்த பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

குறிப்பிடத்தக்க அளவில் 1976 இன் ஆரம்பகாலத்தில் உருவான பங் (PUNK) இயக்கத்தினரும், றெக்கே இசை, அதன் கருத்துக்களையும் கொண்டிருந்தனர் அத்தோடு மட்டுமல்லாமல் ஆங்கிலோ ஜமேக்கா இசையின் கலவையாக ஒரு இசையையும் உருவாக்கினார்.

1970 ன் நடுப்பகுதியில் பபிலோன் (ஆபிரிக்கரின் தாயகம்) ஐ றெக்கே

www.tamilarangam.net



இசைமூலம் பரப்பிக் கொண்டிருக்கும் ஜமேக்கர்களைப் பார்த்து அமெரிக்க பூர்சுவாக்கள் கவலையடையாமல் இருக்கவில்லை. ஆனாலும் அமெரிக்கா கா உலகங்களின் "ஜனநாயகத்திற்காகப் பாடுபடுவது", கலைகளைப் பாதுகாப்பதின்ற வரவேற்பதற்காக மட்டுமல்லாமல்; கறுப்பின பூர்சுவாக்கள் பல ஒலிபரப்பு நிலையங்களுக்கு உரிமையாளர்களாக இருந்து கொண்டு ரேகேயைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தனர்.

அமெரிக்காவில் வாழும் கறுப்பின பூர்சுவாக்கள் தங்களது இசை, ஒலிபரப்பு போன்றவற்றில் ரேகேயை எந்தக் காரணம் கொண்டும் சேர்த்துக் கொள்ளவில்லை. வெள்ளை இன வெறியர்களால் நடத்தப்படும் Island Records, CBS போன்ற இசைத் தட்டுக் கம்பனிகள் ரேகேயின் மூலம் தங்களது செல்வாக்கு, வருமானம் போன்றவற்றுடன் மோதுவதை தாங்காத கறுப்பின பூர்சுவாக்கள் "கறுப்பினத்தவரின் விடுதலை", "புரட்சிதான் எங்களுக்கு தீர்வு"..... எனப் பாடும் இந்தக் காட்டு மிராண்டிகள் யார் எனக் கேள்வி எழுப்பினார்கள்.

ஐலண்ட் இசைத் தட்டுக் கம்பனி ஒரு வெள்ளை இனவாதக் கம்பனி என்று பிரபலமானதாக இருந்தும் வெள்ளை இன "றொக்" இசையை மாத்திரம் இவர்கள் வியாபாரமாக்கினார்கள் ஆயினும் துரித கதியில் குறைந்த காலத்தில் தங்களுக்கு கூடிய லாபமீட்டக் கூடியதான சில இசை வடிவங்களையும் இவர்கள் இசைத்தட்டுக்களாக்கினர் அத்தோடு கறுப்பின இளைஞர்களே கூடியளவு இசைத்தட்டுக்களை வாங்கி சிறந்த பாடல்களின் தேர்வில் நிர்ணயிக்கும் காரணியாகவும் இருந்ததால் இவ் இசைமூலம் கறுப்பின கறுப்பின இசை வியாபாரிகளின் ஏகபோக பிரதிநித்துவத்தை முறியடிக்க இவ் இளைஞர்கள் மத்தியிலும் தங்களது சந்தையைப் புகுத்தவும் ரேக்கே இசையை இவர்கள் பிரபல்யப்படுத்தினார்கள்.

கறுப்பின பெரும் பணக்காரர்களில் ஒருவரான பேர்சி சற்றன் (PERCY SUTTON) என்பவர். INNER CITY BROAD CASTING CO-OP

www.tamilarangam.net


என்ற ஒலிபரப்பு நிலையத்தின் சொந்தக்காரன் 1960களில் நடந்தேறிய
கறுப்பினப் புரட்சியின் போது மேச்சத்திணறிய பணக்காரர்களிற்கு கைமா
றாக வளரவிடப்பட்டவர். பான் அமெரிக்கன் இயக்கம் போன்றவற்றில்
அமெரிக்கக் கொள்கையைக் கொண்ட இவ்வாறான பெருமுலதனக்காரர்க
ளை சமுதாய விடுதலை நோக்கிலிருந்து பிரித்து தனிப்பட்ட வளர்ச்சிகளுக்குத்
கவனம் செலுத்த அமெரிக்கா எடுத்த முயற்சிகளின் வெற்றி ஆதாரமாகக்
காணப்படுபவர்களில் ஒருவர். மடத்தனமான வன்முறையான வழிகளில் இரு
ந்து விடுபட்டு 'உண்மையான' எங்களது வளர்ச்சியில் வியாபாரத்தில் சமூக
அந்தஸ்தில் உயர வழிபார்ப்போமென்று அமெரிக்க கறுப்பின மக்களை
மூளைச் சலவை செய்ய ஊடகமாகவும் செயற்பட்டார்.

இவ்வாறான கறுப்பின (அமெரிக்க கறுப்பின) மக்களின் 'தேசியத்திற்
கும் ரெகே இசைக் கருத்துகளும் மாறுபட்டிருந்ததால், ரெகே இசை வெள்
ளையர்களின் இசை எனவும் நடனத்திற் கொவ்வாது எனவும் காட்டு இசை
எனவும் கூறி கறுப்பின ஒலிபரப்பு . நிலையங்கள், டிஸ்கோ, பத்திரி
கைகள் போன்றவற்றில் விமர்சிக்கப்பட்டது

ரெகே நிலைத்திருக்கும் சந்தர்ப்பம் கூட குறுகியதாக இருந்தது
ஐலண்ட் கம்பனியால் பொப் மாலிக்கு கொடுத்து வந்த பணம் . 1978களில்
அறவே நிற்பாட்டப்பட்டது. (இப் பணம் இசையை விளம்பரப்படுத்தவும்,
நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும்) அதன் பின்பு மாலி தனது பணத்தைக் கொண்
டு அமெரிக்க கறுப்பினத்தவர்களால் நடாத்தப்படும் ஒலிபரப்புக் கம்பனிக
ளில் சந்தர்ப்பத்திற்காக தொடர்ந்து முயற்சி செய்தார். ஆனால் மற்றைய
ரெகே கலைஞர்களுக்கோ நிலைமை மோசமானதாக இருந்தது. இதற்கு
என்ன காரணம் என தெளிவாகவில்லை. ஐலண்ட் இசைத்தட்டு கம்பனி கூட
விளக்கமளிக்கவில்லை ஆனால் இவர்கள் கூறியதெல்லாம் அமெரிக்கச் சந்
தையில் ரெகேயின் நிலை மோசமாகவுள்ளது (திட்டமிட்டுக் குறைக்கப்பட்டது)
அல்லது இக்கலைஞர்கள் முரடர்களாக இருக்கிறார்கள், இவர்களைக் கட்டு

www.tamilarangam.net



ப்படுத்த முடியாது போன்ற நொண்டிச்சாட்டுக்களோ.

எக்சிடஸ் (EXODUS) என்ற இசை நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்த மாலி பெருவிரல் புற்று நோயால் எழுந்து நிற்கமுடியாத நிலையில் இருக்கையில் ஜலண்ட் கம்பனி தொடர்ந்து இவரை பெருவிரலை வெட்டிவிட்டு நிகழ்ச்சி நடத்தச்சொன்னபோது மாலி மறுத்துவிட்டார். அத்தோடு அமெரிக்க T.V. Supper Star ஆன (BARBARA WALTER) பார்பரா வால்ரரின் பேட்டியையும் மறுத்துவிட்டார். இவ்வாறான பிரபல T.V நிறுவனங்களின் பேட்டிகளை மறுத்தவர்கள் வெகுசிலரே 1978 இல் வேர்ஜின் இசைத்தட்டுக் கம்பனி றேகே இசைத்தட்டு உற்பத்தியை அறவே நிறுத்தியது. ஆனாலும் தொடர்ந்து ஜிவ்ஸ்ரண்டும், இங்கிலாந்திலிருந்தும் தரமான இசை வந்து கொண்டிருந்தது இரசிகர்களது எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டிருந்தது. பலசிறிய, நடுத்தர இசைத்தட்டு கம்பனிகளின் முயற்சியால் இசைத்தட்டுக்கள் வேகமாக விற்கப்பட்டாலும் 'சிறந்த' பாடல்கள் வரிசையில் இங்கிலாந்தில் றேகே பாடல்கள் இடம்பெறவில்லை. இது ஒரு மர்மமானதாகத்தான் இருந்தது.(ஏனெனில் இசைத்தட்டுகளின் விற்பனையின் அளவைக் கொண்டுதான் சிறந்த இசை தேர்ந்தெடுக்கப்படுகிறது) ஆனாலும் பல நாடுகளிலும் தொழிலாளர்களும் இளைஞர்களும் றேகேயை விரும்பி கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

.தொடரும்.

---

மனித உயிர்களை காவு கொள்ளும் ஆயுத உற்பத்திக்காக நாளொன்றுக்கு (உலகில்) 37,500 US$ இனை மனிதகுலம் செலவு செய்து கொண்டிருக்கிறது.

✲ ✲ ✲ ✲ ✲

உலகிலுள்ள விஞ்ஞானிகளில் 40% ஆனோர் ஆயுத உற்பத்தி சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

www.tamilarangam.net



# பெண்கள்:
## சடங்குகள் - வேலைப்பளு

வாழ்க்கைக்காய் போராடும் மனித இனத்திலே வாழ்க்கையோடு போராடும் பெண் இனத்திற்காய் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினம் என 1977ம் ஆண்டு ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது. அத் தினத்தை ஒட்டி பெண்கள் தமது வாழ்நிலைகளில் சந்திக்கும் பிரச்சினைகள் சிலவற்றை இக் கட்டுரை சிந்தனைக்கு கொண்டுவர முனைகிறது.

► யதார்த்தினி ◄

தமிழருக்கென ஒரு பாரம்பரிய கலாச்சாரம் உண்டு. இதனை எல்லாத் தமிழர்களும் அறிவர். ஆனால் சமுதாயத் தேவையைப் பொறுத்து கலாச்சாரத்திலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை. சமஉரிமை சமத்துவம் பெண்களுக்கு கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று உணரும் பட்சத்தில் கலாச்சாரத்திலும் சில மாற்றங்கள் தேவையாகின்றது. பருவமடையும்போது செய்யும் சடங்கு, கல்யாணத்தில் தாலி கட்டுதல் போன்றவற்றை எடுத்துக்கொள்வோம்.

சமத்துவம் என நோக்கும்போது பெண்ணுக்கு மட்டும் தாலி கட்டுவதை எப்படி ஏற்கமுடியும். ஒரு திருமணமான பெண்ணை தாலியை வைத்தே தெரிந்துகொள்ளப் படுகிறது என்றால், திருமணமான ஆணை தெரிந்து கொள்ள வேண்டியது இல்லையா? மோதிரத்தை வைத்து தெரிந்து கொள்ளலாம் என்றால்

www.tamilarangam.net



திருமணத்தின்போது மோதிரம் மாற்றுவது சாதமானதாகிறது; சமத்துவமும் கூட !.

அத்தோடு தேவையில்லாததை செய்யாமல் விடுவது என்பது வேறு; இழிவு படுத்துவது என்பது வேறு. பாரம்பரியத்தை கைவிட முடியுமா என்றொரு கேள்வி உண்டு. பாரம்பரியம் சுமமாக இருக்கும்போது ஏற்கலாம்; துலாபாரமாக இருக்கும்போது ஏற்கமுடியுமா?

பாபிலோனில் வாழ்ந்த பழங்குடி மக்கள் குழந்தை பருவமடைந்த நேரத்தில் ஒரு பாவனைச் சடங்கின் மூலம் அதைக் கொண்டாடினர். குழந்தைகள் இறந்து பின் மீண்டும் பிறப்பதாக பாவனைகள் செய்யப்படுகின்றன. இச் சடங்கு குலக்குடியிருப்பிற்கு சிறிது தொலைவில் நடக்கும். அச் சடங்கில், குடியிருப்பிலிருந்து அழுதுகொண்டே புறப்பட்டு, திரும்பி வரும்போது மிகவும் மகிழ்ச்சிகரமாக வருவர். (ஆதாரம்; "மனித சமூக சாரம்" - ஜோர்ஜ் தாம்சன் எழுதியது).

இதேபோன்ற ஒரு சடங்கையே நாமும் கொண்டாடுகிறோம். சாதாரணமாக ஒரு பெண் பருவமடைந்த நாளுக்கு முதல்நாள் வரை வெட்கப்படுவதையோ அல்லது குறும்புச் சேட்டைகள் இல்லாமல் பதமையாக நடந்துகொள்வதையோ பார்க்க முடிவதில்லை. பெண்ணின் உடலுறுப்பில் ஏற்படும் இயற்கையான நிகழ்வை ஊரறியச் செய்வதன்மூலம் அவளை வெட்கப்பட வைக்கிறோம். இதுதான் உண்மை! . இதனைப் பொறுத்தவரையில் நாம் மனிதாபிமானத்துடன் சிந்திக்க வேண்டும்.

அத்தோடு ஒரு பெண் தன் கணவனால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்படி அடிமைப்படுத்தப் படுகிறாளோ, அதனையே தனது பெண் பிள்ளைகளுக்கும் கற்றுத்தருகிறாள். மாறாக தன் கொடுமைகள் அனுபவிப்பதை சுட்டிக்காட்டியோ அல்லது கலாச்சாரச் சூட்டினால் பெண்கள் கட்டிப் போடப்படுவது பற்றியோ - இந்தப் பூட்டுகளை உடைத்து சமத்துவமான வாழ்வை உருவாக்குவதுபற்றிய எந்தக் கருத்துக்களையும் விதைப்பதில்லை.

ஒரு சில ஆண்கள் உணர்ந்து சமையல், தையல் ... போன்றவற்றிற்கு உதவி செய்தாலும் அவனது நண்பர்கள் பெண்டாட்டி தாசன் என்றோ, வேறுவிதத்திலோ பகிடிகள் செய்து அந்த ஒரு சிலரையும் குழப்பி விடுகின்றனர். இன்னும் சில ஆண்கள் வேலை அலுப்பு, குடிபோதை என்பவற்றால் பெண்கள்மீது எரிந்து விழுவதும், அடிப்பதுமேட நிகழ்வுகளாக உள்ளன. பெண்களும் திருப்பி அடிப்பதில்லை. யாராவது கேட்டால், "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்பர். கணவன் எப்படியான அயோக்கியன் என்றாலும் 'பணிந்து போ' என்றால், பெண்ணை உணர்வுகளுள்ள ஒரு மனித ஜென்மமாகப் பார்க்கிறதா எமது சமூகம்!

பல பழமொழிகள்கூட பெண்களின் அடிமைத்தனத்திற்கு போடப்பட்ட பூட்டுக்களாக உள்ளன, அல்லது பெண்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் சமூகக் கட்டுப்பாடுகள் உடைந்து விடாமல் காப்பாற்றும் காவல் அரண்களாக உள்ளன என்றே கருதமுடிகிறது.

அடுத்து பண்டத்தின் பெயர் சொல்லி பெண்களை அழைப்பது (உ+ம் சரக்கு) உணர்வுகளுள்ள ஒரு மனித

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜீவனுக்குரியதுதானா? . நடைமுறையிலுள்ள பேச்சுக்களிலும் மாற்றம் அவசியம் என்பதில் ஐயமில்லை.

ஒரு குழந்தை, சமுதாயத்திலுள்ள பெரியவர்களால் சேகரிக்கப்பட்ட அறிவை தானும் கிரகித்துக் கொள்கிறது. எனவே ஒரு குழந்தையின் பேசும் திறனும் சிந்தனைத் திறனும் எந்நேரத்திலும் அந்த குறிப்பிட்ட சமுதாயத்தின் கலாச்சார மட்டத்தையே சார்ந்திருக்கும் என சொல்லப்படுகிறது. இதில் எந்தளவு உண்மை உள்ளது என்பதை நாம் எல்லோருமே நன்றாக உணரமுடியும். கலாச்சாரம் சம்பந்தமாக நாம் புத்தகப் படிப்பைவிட அதிகமாக பெரியோர்கள் சொல்லியே அறிந்திருக்கிறோம் என்பதே உண்மை.

எமது சமுதாயத்தில் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 'கடமைகள்' (கணவனையும் பிள்ளையையும் பராமரித்தல், சமையல் முதல் உடுப்பு துவையல் வரையிலான வீட்டுவேலைகளைச் செய்தல் மற்றும் கற்பு, நாணம், பணிவு உள்ளவர்களாக வாழ்தல்...) யாவுமே ஒரு பிராமணன் தன் மகளுக்கு கூறும் அறிவுரையாக 15ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "கவிய சேகர" எனும் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதுவே பின்பு தமிழர் கலாச்சாரமாக மாற்றமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் வாழும் எமது பெண்கள் தமது கணவன்மார்களைப் பற்றி இதுவிடயத்தில் பெருமையடித்துக் கொள்வது தற்போதைய நிகழ்வாக உள்ளது. எமது நாட்டைப்போல் சமுதாய உறவுகள் இல்லாமையாலும், பெண்களும் வேலைக்கு போவதாலும் (இதனால் பொருளாதார ரீதியில் சொந்த காலில் நிற்கமுடிவதாலும்),

www.tamilarangam.net



பெண்மீதான சமூக ஒடுக்குமுறை மங்கிப்போய் காணப்படுகிறது ; நீங்கவில்லை ! . விஞ்ஞான சாதனங்களின் உதவி அதிகமாக உள்ளதால் ஆண்கள் சமையல், தையல் போன்றவற்றை பகிர்ந்துகொள்கின்றனர். இவற்றையும்-கூட வெளிநாட்டில் வாழும் குடும்பங்களில் எத்தனை விதமானோர் செய்கின்றனர் என்பது கேள்விக் குறியே!

பெண் வேலைக்குப் போனால் உறவினர் (தாய், சகோதரி,....) வீட்டுவேலைகளைக் கவனிக்கும் எமது சமுதாய வழக்கத்தை இங்கே நடைமுறைப் படுத்த வழியில்லாமல் இருப்பதும் ஒரு காரணமாகும். உண்மையிலேயே பெண்ணுக்கு சமத்துவம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் வேலைகளைப் பகிர்ந்து கொண்டவர்கள் வரவேற்கப்பட வேண்டியவர்களே!. தவிர சூழ்நிலை நிர்ப்பந்தங்களில் செயல்படுபவர்களாயின் நாடு திரும்பினாலோ அல்லது வேறு உறவுகள் ஒட்டிக் கொண்டாலோ பழையபடி முருங்கை மரத்தான்....! எனவே கருத்து ரீதியான மாற்றம் ஏற்படாதவரை பெண்கள் தங்கள் கணவன்மார் பற்றிய வாய்வெட்டால் பிரச்சினைகளை வெல்ல முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

---

• நூல் அறிமுகம்

**இரண்டாவது பிறப்பு**



**அருந்ததி**

ஆசியா
3, Allee Paul Leautaud,
95200 Sarcelles.
FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பதவிப் போட்டியும் பரிதவிக்கும் இந்தியாவும்

"இந்தியா மீண்டுமொரு பொதுத்தேர்தலை சந்திக்கப்போகிறது" என அரசியல் நோக்கர்களால் கூறப்பட்டது, நான்கு மாதத்திற்குள் நிரூபணமாகி உள்ளது. இன்றைய இந்தியப்பிரதமர் சந்திரசேகரின் ராஜினாமாவைத் தொடர்ந்து இன்று எந்த ஒரு அரசும் கூட்டு அரசாங்கம் அமைக்க தயார் இல்லாத நிலையே நிலவுகின்றது. குறிப்பாய் மிகப் பெரும்பான்மை கொண்ட கட்சியான காங்கிரஸ் கட்சியுடன் கூட்டரசாங்கம் அமைக்க எந்த ஒரு கட்சியும் தயார் இல்லாத நிலையில் தேர்தல் வருகின்ற மே மாதம் நடைபெறும் என ஜனாதிபதி வெங்கட்ராமன் அறிவித்துள்ளார்

சென்ற நவம்பர் மாதம் மண்டல் கமிஷன், அயோத்திப் பிரச்சனைகள் காரணமாய் வி.பி.சிங் பதவி துறக்கவேண்டியேற்பட்டது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி சந்திரசேகர் ஜனதா தளத்தினை உடைத்துக் கொண்டு ஜனதா தளம்(எஸ்) என்னும் புதிய கட்சியினை அமைத்துக் கொண்டார். தனது 54 எம்பிகளுடன் கூடவே காங்கிரஸ், அ.தி.மு.க உதவியுடன் "ஓர் நாள் தானும் இந்தியாவுக்கு பிரதமர் ஆவது" என்று இலட்

www.tamilarangam.net



நியகனவுடன்' ஆட்சிக்கு வந்தார்.

வி.பி.சிங்கின் பிரதமர் பதவி பறிபோன காலத்திலேயே தேர்தல் வைக்கப்பட்டிருக்குமேனால் அது ராஜீவ் காந்திக்கு பாதகமாய் அமைந்திருக்கும். மண்டல் கமிசன், அயோத்தி பிரச்சனைகளில் எதிரணி, மற்றும் ஆதரவுக்கட்சிகளிடமிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியபோதிலும் இந்திய மக்களின் ஆதரவு இவ்விரு பிரச்சனைகளின் பக்கமே. இந்நடவடிக்கையில் வி.பி.சிங் 'உறுதியான' நிலைப்பாட்டில் இருந்தார் என்ற படிமம் பொதுவாக இந்தியா முழுக்க இருந்தது. இதனால் வி.பி.சிங் அலையை தணிக்கும் நோக்கில் 54 பேர் கொண்ட சந்திரசேகர் கட்சியை ஆட்சியில் அமர்த்த ராஜீவ் விரும்பினாலும் எந்த நோக்கங்களுக்காக சந்திரசேகரை பிரதமர் பதவியில் அமர்த்தினார்களோ அதன் நோக்கங்கள் பெருமளவு பூர்த்தி செய்யப்படமுன்னரே அவசரப்பட்டு சந்திரசேகர் அரசுக்கு காங்கிரஸ் கொடுத்த நெருக்கடியால் சந்திரசேகர் ராஜினாமாவைச் செய்துள்ளார். சந்திரசேகரின் ராஜினாமா காங்கிரசுக்கு தலையிடியையே கொடுத்துள்ளது. இன்று காங்கிரஸ் தேர்தல் தயாரிப்புகள் முழுமை பெறாத நிலையிலேயே தேர்தலை சந்திக்க வேண்டியுள்ளது. சென்ற பொதுத்தேர்தலில் வென்ற 194 இடங்களைக்கூட இம்முறை பெறுமா என்பது சந்தேகமாய் உள்ளது. இன்னும் கிளம்புகிற வி.பி.சிங் அலை, பாரதிய ஜனதாவிற்கு இந்து மதத்தினால் ஏற்பட்டிருக்கும் செல்வாக்கு, ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் ராஜீவின் எதேச்சாதிகாரப்போக்கினால் காங்கிரஸ் தலைமை மாறியது இத்துடன் கூடவே இதுவரை சந்திரசேகர் அரசு செய்துவரும் தவறான நடவடிக்கைகளுக்கு காங்கிரசும் உடந்தை என்ற எதிர்க்கட்சிகளின் பிரச்சாரம் வேறு.

காங்கிரசுக்கு தேர்தலை முகம் கொடுக்க இத்தனை பாதகமான அம்சங்களிருந்தும் ஏன் சந்திரசேகர் அரசுக்கு நெருக்கடியினை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடுத்தார்கள் என்று புதிய கேள்வி எழுகிறது. போர்பஸ் பற்றிய ஆவணங்கள் எல்லாம் அழித்துவிட்டோம் என காங்கிரசுக்கு காட்டிக் கொண்டு இரகசியமாய் சந்திரசேகர் போர்பஸ் பற்றிய விசாரணையை மேற்கொண்டு வருகிறது என காங்கிரஸ் சந்தேகிக்கிறது. சந்திரசேகர் தான் தேர்தல்மூலம் ஆட்சிக்கு வருவது **சாத்தியமற்ற** விடயம் என்று தெரிந்து கொண்டதால், போர்பஸ் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டு ராஜீவின் திருட்டை அம்பலப்படுத்துவேன் என வெருட்டி காங்கிரசை தனக்கு தொடர்ந்து ஆதரிக்கும்படி நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி அல்லது கட்சிகளை உடைக்கும் தனது பாரம்பரிய செயலின் மூலம் காங்கிரசை உடைத்து புதிய கூட்டுடனான ஆட்சியை அமைக்க முயற்சித்திருக்கலாம்.

போர்பஸ் பற்றிய ஆவணங்களை சுவிஸ் அரசு சந்திரசேகர் அரசிடம் கொடுத்ததை காங்கிரஸ் ஆரம்பகாலங்களில் தனக்கு சாதகமானது என்றே நம்பியது. ஆனால் அதன் விடயமாய் பழைய அதிகாரிகள் சிலர் மாற்றமடையாமல் இருப்பது காங்கிரசுக்கு சந்தேகத்தை ஊட்டியுள்ளது. அத்தோடு இந்தியாவானது அணிசேரா நாடுகளுடன் தன்னை இணைத்துக் **கொண்ட** ஓர் 'நடுநிலை' நாடு என்ற பட்டத்தையே உலகுக்கு கொடுத்து வந்துள்ளது. இந்த 'நடுநிலை' பாத்திரத்துடன் சென்றமாதம் அனைவரது கவனத்தையும் ஈர்த்த வளைகுடாப் பிரச்சனையின் போது காங்கிரஸ் ஆட்சியில் அமர்ந்தால் கொர்பச்சேவ், புஷ், சதாம் இவர்களை சந்திப்பதன் மூலம் ராஜீவுக்கு ஓர் பெரிய விளம்பரம் கிடைத்திருக்கும். இது 'உலகத் தலைவர்களில்' ராஜீவுக்கும் ஓர் இடத்தைக் கொடுத்திருக்கும். இக் காரணங்களால் சந்திரசேகர் அரசுடன் முன்வதும் -பின் வாங்குவதுமே காங்கிரசின் நடவடிக்கையாய் சமீபகாலமாய் உள்ளது. இந் நடவடிக்கையின் உச்சக்கட்டமாகவே ராஜீவ் வீட்டில் "இரு பொலிஸ் அதிபர்கள் அரசு சார்பாக உளவு பார்த்தார்கள்" எனக் கூறி காங்

www.tamilarangam.net



கிரஸ்சும், அ.தி.மு.க.வும் லோக சபைக் கூட்டத்திலிருந்து வெளியேறியது கூட்டுக்கட்சிகளின் வெளியேற்றம் சந்திரசேகர் பிரதமர் பதவியை ராஜினாமா செய்வதில் கொண்டுவந்து நிறுத்தியது.

காங்கிரஸ்சானது லோகசபையில் இருந்து வெளியேறினால் சந்திரசேகர் பிரதமர் பதவியை ராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கவில்லை இதனாலேயே தாம் வாபஸ் வாங்காமலேயே சந்திரசேகர் பிரதமர் பதவியைத் துறந்தது ஒருதலைப்பட்சமானது எனக் கூறுகின்றார். இருப்பினும் மே மாதம் தேர்தலை சந்திக்க நாம் தயார் என அறிவித்துள்ளார். அத்தோடு ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் கதைத்து பிரதமர் பதவி தனக்கு தரவேண்டும் என்று காங்கிரஸ் கோருகிறது. இதற்கு தான் பெரும்பான்மை இருப்பதாக காரணம் கூறுகிறது. இடைக்கால பிரதமர் பதவியைப்பயன்படுத்திக் கொண்டு போபர்ஸ் பற்றிய ஆவணங்களை மறைப்பதற்கும் இடைக்கால பிரதமர் வாய்ப்பை பயன்படுத்தலாம் எனக் கருதுகிறது. அத்தோடு மே மாதம் தேர்தல்வர இருப்பதால் அரச தொடர்பு சாதனங்களையெல்லாம் தனது தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்த திட்டமிட்டிருந்தது. ஆனால் எதிர்க்கட்சிகள் ராஜீவ் இடைக்காலப் பிரதமராக வருவதை நிராகரித்ததுடன் முன்பு இருந்த அரசே இடைக்கால அரசாய் வர வேண்டும் என்ற சட்டத்தையும் நினைவூட்டியுள்ளனர். இதனால் ஜனாதிபதியும் சந்திரசேகரையே இடைக்கால பிரதமராய் நியமித்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களாய் சந்திரசேகர் அரசை வைத்துக் கொண்டு காங்கிரஸ் பல ஆட்சிக் கவிழ்ப்புகளை அரங்கேற்றியது. அசாம், கோவா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை பிரகடனப்படுத்தியுள்ளது. இதன் இறுதி ஆட்சிக்கவிழ்ப்பாகவே தமிழக ஆட்சி கலைக்கப்பட்டது. தமிழக ஆட்சி கலைக்கப்படுமுன்னர் "தமிழக அரசு புலிகளுக்கு தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருமானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்"

www.tamilarangam.net



என சந்திரசேகர் எச்சரிக்கை செய்தவுடன்; கருணாநிதி உடனேயே தனது விசுவாசத்தை மத்திய அரசுக்கு வெளிக்காட்டுவதற்காக சந்து பொந்துவிலி உள்ள தமிழீழ போராளிகளை கைது செய்தது. மத்திய அரசு கருணாநிதியின் நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை என அறிவித்தவுடன் (முரசொலி. மு.க. கடிதம் 13.2.91) ஈழப்போராளிகளுக்கு செய்த துரோகங்களையே தான் செய்த சாதனைகளாம் பட்டியல் போட்டுக் காட்டினார். இருப்பினும் ஜெயலலிதா, காங்கிரஸ் நிர்ப்பந்தங்களால் சந்திரசேகர் கருணாநிதி அரசைக் கலைத்தது. தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்ட பின்னர் ஈழப்போராளிகளுக்கு தார்மீக ஆதரவு எப்போதும் தாம் வழங்குவோம் என ஒன்றுக்குப்பின் முரணாய் அறிக்கை விட்டார். இப்போ தேர்தல் பிரச்சாரத்தின் தன்னை ஈழ விடுதலை ஆதரவாளனாய் காட்டிக் கொண்டதுடன் இதற்காகவே தனது பதவி பறிபோனதாய் கூறி அனுதாப அலையைப் பெற முயன்று வருகிறார்.

ஜெயலலிதாவோ தனது 'கவர்ச்சி' அரசியல் அலையை மூலதனமாய் கொண்டு இத்தேர்தலில் தாம் வெற்றி பெறலாம் என நம்புகின்றார். ஜெயலலிதாவின் கவர்ச்சி அரசியல் தி.மு.கவின் 60 வருட கால கவர்ச்சி அரசியலையே ஏப்பம் விடுவதாய் உள்ளது.

இன்றைய இந்திய அரசியல் நிலைமையை நோக்கும்போது எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க முடியாத நிலையே தென்படுகின்றது. இதனால் இந்திய பாராளுமன்ற அரசியலில் தொடர்ந்து ஓர் இழுபறி நிலையில் இருப்பதற்கான சாத்தியம் கூடிக் கொண்டே செல்கின்றது.

• சாருதி •

*****************************************************

அட்டைப்படம்: நன்றி ஐலண்ட் (ISLAND)

www.tamilarangam.net



# மௌனித்து விடு

உன்
குரல்வளை நெரித்து
மௌனித்துவிடு .....
முடியாதபோது
கண்களைப் பிடுங்கியெறிந்து
காதை கட்டையறைந்தடைத்து
தொலைத்துவிடு.

காற்றில் கலந்து வாடைவீசி
மூக்கும் நுகருதனில்
அதனையும் தொலைத்துவிடு
முடியாதபோது
மௌனித்துவிடு.

வாழ்ந்துவிட நினைக்கும்
உன்
வாழ்வின் கணங்களுக்காய்
பேசுவதை மற

ஊளையிட்டு வீசும்
காற்றின் இரைச்சலுள்ள
யாருமற்ற நீண்டவெளி ....
நிச்சயப்படுத்து !
யாருமற்றதை நிச்சயப்படுத்து !!
சொல்லிக் குளறு
வாயிலிட்டு நெடுநேரம்
சொல்லிக் குளறு ....

நீண்ட வெளியின்
வீசும் காற்றின் பேரிரைச்சலில்
பெருங்குரலெடுத்து
சொல்லிக் குளறு
மறந்துவிடாமல்
யாருமற்றதை நிச்சயப்படுத்தி
பெருங்குரலெடுத்து
சொல்லிக் குளறு .....

ஜீவன்

www.tamilarangam.net



# இலங்கையும் வெளிநாட்டு கடன்களும்




Prof: Tilakaratne அவர்களின் Forein Debt and Srilanka என்ற கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.

•தேவா- நந்தகுமார்

சரித்திரரீதியாக இலங்கையின் செல்வங்கள் காலனித்துவ நாடுகளால் சுரண்டப்பட்டு வந்தது. தெரிந்ததே. சுதந்திரத்தின் பின்புகூட எமது ஆட்சியாளர்கள் இச்சுரண்டல் நிலைமையை கவனத்தில் கொள்ளாமல் ஆட்சியை இறுகப்பற்றிக் கொள்வதிலேயே கவனம் செலுத்தியிருந்தனர். இந்த நிலைமை தொடர்ந்து 1977ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசினால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை வெளிப்படையாக "திறந்த பொருளாதாரக் கொள்கையை" அமுல்படுத்தியதன் மூலம் உள்வாங்கியது. உள்நாட்டு மூலவளங்களையும், மனித வலுக்களையும் பயன்படுத்தி உள்நாட்டு மொத்

www.tamilarangam.net



த தேசிய உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு பதிலாக வெளிநாட்டு முதலீட்டாளர்களை உள்வாங்கியதன் மூலம் எமது செல்வங்களான மூலவளங்கள், உழைப்புகள், முதலீடுகள், போன்றவற்றை தொடர்ந்தும் சுரண்டுவதற்கு அரசு அங்கீகாரம் வழங்கியது மேலும் தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் நாடு சிக்குண்ட நிலையில் பாதுகாப்பு செலவு அதிகரித்துக் கொண்டே போனது நாட்டின் குழப்பமான நிலைமை பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியால் கிடைக்கும் வருமானம் மிகக்குறைந்த வீதத்திலே இருந்தது உதாரணமாக நாட்டின் 'சுதந்திரத்திற்கு' பின்பு மிகக்கூடிய உற்பத்தி வீழ்ச்சி 1989இல் ஆகும். முந்தைய ஆண்டுகளில் 4% ஆக காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி 89இல் 2.9 வீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இந்நிலைமைகளால் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்குக்கூட வெளிநாட்டுக் கடனையே எதிர்பார்த்து நிற்கவேண்டியுள்ளது.

உலகவங்கியின் ஆதரவின்கீழ் இயங்கும் "கடனுதவிகள் பற்றிஆராயும் பல்நாட்டுக்குழு" (இது ஒவ்வொரு வருடமும் பரிசில் கூடுவது வழக்கம்) இலங்கைக்கு கடனுதவிகளை வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்கும்போதெல்லாம் எமது நாட்டில் உற்சாகம் கரைபுரண்டோடும்.

www.tamilarangam.net



பத்திரிகையாளர்களின் தலையங்கங்கள், அரசியல் வாதிகள் யாவரும் ஏதோ கடன் கொடுக்கும் நாடுகள் இலங்கை அரசின் சீழ்க பொருளாதார கொள்கைகளின் திறமைக்கு ஆதரவாக பாரிய தொகையை நன்கொடையாக வழங்குவது போல வும் இலங்கை இதற்கான வட்டி என்பனவற்றை திருப்பி செலுத்தி தேவையில்லை என்பது போ லவும் ஒரு மாயையை ஏற்படுத்துகிறார்கள். இதன் மூலம் எல்லா வெளிநாட்டு உதவிகளும் கடன்களில்லை, இவை திருப்பி கொடுக்க வே ண்டியதில்லை என்பது போல் மக்களுக்கு விளக் கமளிக்கப்படுகிறது. சில கடன் வழங்கும் நிறுவ னங்கள் இலங்கை போன்ற நாடுகட்கு கடன் கேட்காமலேயே கடன்களை கொடுத்து நாட்டை ஏழ் மையாக்கும் தன்மையை கொண்டன." எமது நாட்டில் பெரும்பாலானோர் நாட்டின் மிக மோசமான கடன் நிலையையும், வெளிநாட்டுக் கடன்கள் எமது பொரு ளாதாரத்தின் நாளாந்த வாழ்க்கையில் அது செலுத்தும் தாக்கங்களையும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்." என்கிறார் பொருளாதாரத்துறை பேராசிரியர் சிறிசேன திலகரத்தினா.

வெளிநாட்டுக்கடன்கள் நீண்ட காலக் கடன், குறுகியகாலக் கடன், முதலீட்டுக்கடன், மானியக் கடன், சலுகை அடிப்படையிலான கடன்கள், திருப்பி செலுத்தாத கடன்கள், திட்டக்கடன் (மகாவலி) என்ற அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்படுகின்றது.

www.tamilarangam.net



இவற்றுள் வட்டியுடன் திருப்பி செலுத்தும் கடன்கள் வட்டியில்லாக் கடன்களும் அடங்கும். உதாரணமாக 1990ல் 1000 மில்லியன் டொலருக்கான கடனில் 20% (200 மில்லியன் டாலர்) திருப்பி செலுத்த தேவையில்லாத, வட்டியில்லாத உதவித் தொகையாகும். மிகுதி 800 மில்லியன் டாலரும் ஏற்கனவே இருக்கும் கடன்களுக்கு மேலதிகமான கடனாகும். இவை எல்லாமே வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன்களாகும். இக்கடன் தொகைகள் சிலசலுகை அடிப்படையில் அதாவது நீண்ட காலக்கெடு, குறைந்த வட்டிவீதம், காலக்கெடு முடிந்ததும் கருணைக்காலம் என்ற அடிப்படையில் நிதி நிறுவனங்களால் வசூலிப்பதுண்டு.

ஆனால் இக்கடன்கள் இருக்கும் கடன்களுக்கு மேலதிகமான கடன்களாவதுடன் இன்றைய வருங்கால சந்ததிகள் கூட இவற்றினை திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது இன்றுபிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் கடனாளியாகவே பிறக்கின்றது. இலங்கை 80களின் பின்பு சர்வதேச பணச்சந்தையில் வியாபாரரீதியான வட்டி வீதங்களுக்கும் கடன்களை பெற்றுள்ளது. ( இக்கடன் குறுகியகாலக்கடனாகவும், கூடிய வட்டியுடன் திருப்பி செலுத்தப்பட வேண்டியதாகும்) 1989இல் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் தொகையில் 25% இவ்வாறான வியாபார ரீதியான கடன்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



1980 தொடக்கம் 1989க்கான பத்தாண்டு காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரத்தில் வெளிநாட்டுக் கடன்கள் பாரிய தாக்கத்தினை செலுத்தின. இக்காலப்பகுதியில் கடன்கள் முன்னைய காலத்தைவிட 6 மடங்கு அதிகரித்துள்ளது 1980ல் 30,000 மில்லியன் ரூபாவாக இருந்த (1667 மில்லியன் அமெரிக்கன் டாலர்) வெளிநாட்டுக்கடன் 1989ல் 2,07,353 மில்லியன் ரூபாவாக (5184 மில்லியன் அமெரிக்கன் டாலர்) கூடியுள்ளது. இந்நிலைமை அடுத்து வரும் பத்தாண்டில் இரட்டிப்பான கடன்பழுவை எதிர்நோக்கக் கூடியதாக இருக்கும். இந்நிலை தொடருமானால் ஒவ்வொரு கடனுதவிகளோ சராசரி 532 மில்லியன் அமெ.டாலர் ஆகும் அதாவது கடன் தவணைகள், வட்டிகள் போன்றவற்றிற்கு மட்டும் கிடைத்த கடனில் 94% செலவழிக்கப்பட்டுவிட்டது. மொத்தத்தில் நாட்டின் அந்நிய செலவாணியாக கிடைப்பது கடன் என்ற பெயரில் மிகமிக சொற்பத்தொகையே. ஏற்கனவே கடன் கொடுத்த நாடுகட்கு, புதிதாக மற்றைய நாடுகளிடம் வாங்கிய கடன் பணத்தை கிட்டத்தட்ட முழுமையாகவே செலுத்திவிடுகிறது எனலாம். எனவே ஏற்கனவே பெறப்பட்ட கடன்களை அடைக்க இன்னமும் வெளிநாட்டுக் கடன்களைத்தான் நம்பியிருக்க வேண்டிய நிலை நீடிக்கிறது

வெளிநாட்டுக் கடன்களிலும் உதவித்தொகைகளிலும் இலங்கை அரசு கடந்த பத்தாண்டு காலமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலந்தள்ளியிருக்கிறது. ஏற்றுமதியில் உழைக்க பணத்திலும் பார்க்க கூடுதலாக இறக்குமதி செய்வதற்கு வெளி நாட்டுக்கடன்கள், உதவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கம் தனது மானியத் தொகையை சமாளிக்கவும், வரவுசெலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை சரிக்கட்டவும் இக்கடன்கள் 'உதவியுள்ளன' (வரவு செலவு திட்டத்தில் துண்டுவிழும் தொகை 1980ல் சராசரி 800 கோடியாக இருந்தது. இத்தொகை 1989ல் 4000 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. பாதுகாப்பு செலவினங்களும் வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை அதிகரிக்க செய்துள்ளது) அடுத்து தேசிய சேமிப்பை உயர்த்தாமல் தேசிய முதலீட்டை இலங்கையனும் வறுமைக் கோட்டுக்கு கீழ் தள்ளி விடப்படுவர். 1980ல் மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்திக்கு எதிராக இருந்த மொத்த வெளிநாட்டுக்கடன் 50%மாகவே இருந்தது. ஆனால் இது 1989ல் 90%மாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் ஏற்றுமதி வருவாயிலும் பார்க்க ஏழு மடங்கு உயர்ப் பெருக்க நிலையில் உள்ளது.

ஒரு இலங்கையன் வெளிநாட்டுக்கு செலுத்த வேண்டிய தலாகடன் தொகை 1980ல் 2036 ரூபா (113 அமெ டாலர்)வாக இருந்தது இக்கடன் தொகை 1989ல் 12336ரூபா(308 அமெ டாலர்)வாக உயர்ந்துள்ளது. இக்கடன் அளவுகள் கூடிக் கொண்டு போவதற்கு முக்கிய காரணம் ஏற்கனவே பெறப்பட்ட வெளிநாட்டுக்கடன்களின் சேவைத் தொகையும்

www.tamilarangam.net



(திருப்பி செலுத்தவேண்டிய தவணைத் தொகை) அதற்கான வட்டிகளையும் தீர்க்கவே பயன்பட்டுள்ளது. 1980ல் பெறப்பட்ட கடனுதவித் தொகை 326 மில்லியன் அமெரிக்க டொலராகும். ஆனால் அவ்வாண்டு பெறப்பட்ட மொத்தக்கடனில் 167 மில்லியன் அமெரிக்க டொலர் திருப்பி செலுத்தப்பட்டுள்ளது. எனவேதான் கிடைத்த கடனில் 51.2% தொகையே கடனுக்கும் வட்டிக்குமாக செலுத்தப்பட்டுள்ளது. மீதிக்கடன் நிலுவையாக வளர்ந்து வந்தது. 1987-1989 காலப் பகுதியில் வெளிநாட்டுக்கடன்களுக்காக 502 மில்லியன் அமெரி. டொலரை இலங்கை அரசு செலுத்தியுள்ளது. இக்காலப்பகுதியில் கிடைத்த


→ a+b

பெருக்கிக் காட்டவும் இந்தக்கடன்கள் உதவிகள் அரசுக்கு 'கைகொடுத்துள்ளன' அதுமாத்திரமன்றி வருடாவருடம் கிடைக்கும் கடன்களும் உதவிகளும் வருவாய் மூலங்கள் செலவினங்களுக் கிடையிலான தளம்பல் தன்மையை தக்க வைத்துக் கொள்ள உதவி புரிந்திருக்கின்றன.

பெறப்பட்ட கடன்கள், உதவிகள் இலங்கையின் பொருளாதார விருத்திக்கு எந்தளவு பயன்பட்டுகிறது என்ற கேள்வி எழுகிறதல்லவா? உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கோ அல்லது தேசிய முதலீடுகளை பெருக்கி அதன்மூலம் வெளிநாட்டு கடன்கள் உதவிகளில் தங்கியிருக்கும் நிலையை குறைத்துக் கொள்வதிலோ, வறுமையையும் வேலை வாய்ப்பின்மையையும் குறைத்துக் கொள்வதிலோ அல்லது அரச வங்கிகள் மூலமாக கிராமியமட்டத்தில் கடன்

களை வழங்கி உள்ளூர் உணவு உற்பத்திகளை பெருக்கவோ முயற்சித்திருந்தால் நிம்மதியடையலாம். ஆனால் எதுவுமே நடந்ததற்கான ஆதாரங்களை காணக் கூடியதாக இல்லை.

மாறாக எமது நாடு மேன்மேலும் வெளிநாட்டுக் கடன்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. இல்லையேல் நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித நிலையை தான் அடையும். அத்துடன் வறுமையையும் வேலைவாய்ப்பின்மையையும் பொருளாதாரத்தில் மிகமுக்கிய பிரச்சனையாக இருக்கிறது. நாட்டின் சனத்தொகையில் அத்தியாவசிய தேவைகளை தன்னும் பெறமுடியாத நிலையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கினர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் தொழிலாளர்களில் 20%த்தினர் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். பாடசாலைக்கு செல்வதற்கு முன் காலங்களில் இருக்கும் பிள்ளைகளில் மூன்றில் ஒருபங்கினர் சத்துணவுப் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர். தாய்மார்களின் சத்துணவுப் பற்றாக்குறையால் பிறக்கும் குழந்தைகளில் 30%த்தினர் எடைக்குறைவாகவும் நோயாளியாகவும் பிறக்கின்றனர் இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது வெளிநாட்டுக் கடனுதவிகள் எந்தவித நிவாரணத்தையும் வழங்கவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக நாட்டின் பொருளாதாரமும் படுகுழியை நோக்கி வேகமாக முன்னேறுகிறது. ■



www.tamilarangam.net

Nur Für Freundkreis

புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி - 3 SFr.

ஒருவருடம் - 22 SFr.

ஐரோப்பியநாடுகள் - 25 SFr.

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!

விமர்சனங்களையும்

ஆக்கங்களையும்

வரவேற்கிறோம்!

• ஆர் · குழு •

வங்கிக் கணக்கு இல:

SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி : "BÜCHER VERKAUF"

SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND


# சரிநிகர்

இழந்து போன மனித உரிமைகளுக்காக;

நசுக்கப்படும் ஜனநாயகத்துக்காக; குரல் கொடுக்கிறது சரிநிகர்.

நெருக்கடியான நிலைமைக்குள் வெளிவருகிறது சரிநிகர்.

இதன் பணி தொடர கை கொடுங்கள்!

**நீங்களும் சந்தாதாரர் ஆகுங்கள்!**

ஆண்டுச் சந்தா : 15 US $

'SARI NIHAR', 6, ALOE AVENUE, COLOMBO - 3, SRI LANKA.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கர்வம்

இப்போ
சேவல்களுக்குக் கூட
கர்வம்
வந்துவிட்டது
ஏனெனில்
தாங்கள்
கூவித்தானாம்
சூரியன்
துயில் எழும்புகிறான்.

## நினைத்தது ஒன்று

நாம்
நினைத்தோம்
விளக்கின் ஒளி
வெளிச்சத்தைத்தான்
கொடுக்குமென்று
ஆனால்
அது
விட்டில்களையுமல்லவா
கொழுத்துகின்றன

* ஆனந்தி *